V. 6 No. 33 24 Aur. 1933

C

3L
m211, M28 KN
M33.6.33.
189157

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE ... MADRAS
19 JAN 1934

Vol 6.] 1933 ஆகஸ்ட் மீ 24உ [No. 33

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 613
2. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 615
3. காற்றுமழை (அங்கம் 3. களம் 3.)
Shakespeare's Tempest 617
4. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை 619
5. அப்பர் (64-கலை, வியாகரணம்—
உரிச்சொற்கள்.)
E. N. தணிகாசல முதலியார், B.A., B.L., 622
6. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 7-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 623
7. மானத சாத்திரம் (Psychology)
வித்வான் T.P. மீனாக்ஷிசுந்தரம், M.A.B.L. 624
8. கலித்தொகை (பாலைக்கலி, 22)
T. A. கனகசபாபதி முதலியார் 626
9. பொதிகை நிகண்டு (ம,மூ,மெ,மே,மை,
மொ,மோ,ய,யா,யு,யோ)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 627
10. வர்த்தமானம் 628

கலாநிலயம்

கடலிற் கலந்த காட்டாறு.

மகாகவி காளிதாசன் எழுதிய சாகுந்தலத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பொன்றிற்கு நம் கவி இரவீந்திரநாதர் வரைந்த முன்னுரையில், கீழ்வரும் வாசகம் காணப்படுகின்றது.

The two peculiar principles of India are the beneficient *tie of home life* on the one hand, and the *liberty of the soul* abstracted from the world on the other. In the world India is variously connected with many races and creeds; she cannot reject any of them. But on the altar of devotion (*tapasya*) India sits alone. Kalidas has shown, both in *Sakuntala* and *Kumara Sambhava*, that there is a harmony between these two principles, an easy transition from the one to the other. In his hermitage a human boy plays with lion cubs, and the hermit spirit is reconciled with the spirit of the householder.

On the foundation of the hermitage of recluses Kalidas has built the home of the householder. He has rescued the relation of the sexes from the sway of lust and enthroned it on the holy and pure seat of asceticism. In the sacred books of the Hindus the ordered relation of the sexes has been defined by strict injunctions and laws. Kalidas has demonstrated that relation by means of the elements of Beauty. The beauty that he adores is lit up by grace, modesty, and goodness; in its intensity it is true to one for ever; in its range it embraces the whole universe. It is fulfilled by renunciation, gratified by sorrow, and rendered eternal by religion. In the midst of this beauty, the impetuous unruly love of man and woman has restrained itself and attained to a profound peace, like a wild torrent merged in the ocean of goodness. Therefore is such love higher and more wonderful than wild and untrained Passion.

இரவீந்திரநாதர் தம் இவ் வாங்கில வாசகத்தில் அடங்கிய கருத்து மிகவும் அருமையானது. அதனைப்பின் வருமாறு கூறலாம்—

இந்தியர்க்கே சிறப்பாய தத்துவம் இருவகைத்து.—இல்வாழ்க்கையின் பயனுடைய கட்டுப்பாடு ஒருபுறம், உலக விவகாரங்களினின்று தன்னைப் பிரித்துக் கொண்டு இயங்குகின்ற ஆன்மாவின் விடுதலை மறுபுறம். இவ்வுலகத்தின்கண் இந்தியாவானது, பற்பல சாதிகளுடனும் மதங்களுடனும் சம்பந்தப்பட்டிருக்கின்றது; அவைகளில் எதனையுந் தள்ளிவிடல் என்பது இந்தியாவிற்கு இயலாது. எனினும் பக்தி என்னும் தவத்தின் பீடமீது இந்தியாவோ ஒரு தனிச் சிறப்புடன் அமர்ந்திருக்கின்றது. சாகுந்தலம் என்னும் நாடகத்திலும் குமாரசம்பவம் என்னும் காவியத்திலும், காளிதாஸ மகாகவி கட்டுப்பாடுடைய இல்வாழ்க்கையின் தத்துவத்திற்கும், பிரிந்துநின் றியங்குகின்ற ஆன்மாவின் விடுதலை என்னும் தத்துவத்திற்கும் இடையே யோர் இசைவாய்ந்த ஒற்றுமை உளதென்பதையும், ஒன்று மற்றொன்றாக மிக மிக எளிதில் மாறுகின்ற முறைமை வாய்ந்ததென்பதையும், செவ்விதின் காட்டியிருக்கின்றார். இக் கவிவார் நிறுவியவோர் ஆசிரமத்தில் ஓர் மானுடமைந்தன் சிங்கக் குட்டிகளுடன் விளையாடுகின்றான்; தவவுணர்வு இவ்வண்ணம், இல்வாழ்க்கை யுணர்வுடன் இணக்கமுறுகின்றது. தவசியர்தம் ஆசிரமத்தையே அத்திவாரமாக அமைத்து, இல்லக்கிழவர்தம் மனைவாழ்க்கை

யைக் காளிதாஸர் கட்டி அமைத்திருக்கின்றார். காமத்தின் ஆட்சியினின்று காதலை மீட்டிக்கொணர்ந்து, துறவெனும் தூய்மைவாய்ந்த திப்பிய சிம்மாதனத்தின்மீது அமர்த்தினார். தூய்மை மிகுந்த இந்திய சாத்திர நூல்களில், ஆண்பாலார்க்கும் பெண்பாலார்க்கும் இடையே வழங்குகின்ற முறைமைசான்ற உறவானது கடக்கரிய விதிகளாலும் விலக்குக்களாலும் வரையறுக்கப் பெற்றிருக்கின்றது. அந்த உறவினைத்தான் காளிதாசர் அழகினது அம்சங்களைக்கொண்டு நிரூபித்துக்காட்டினார். மனமார அவர் ஆராதிக்கின்ற அவ்வழகானது, சுந்தரத்தாலும் அடக்கத்தாலும் நன்மையாலும் ஒளிபெற்றுத் திகழ்கின்றது. அதன் செறிவுநிலையிலோ, ஒருவருக்கு அது என்றென்றும் உண்மையா யமையும்; அதன் அகலத்திலோ பிரபஞ்சம் ஆடங்கலும் தழுவிக் கொள்கின்றது அது. அவ்வழகானது துறவினால் நிறைவடைகின்றது, துன்பத்தால் இன்பமடைகின்றது, மதவுணர்வினால் நிரந்தரமான நிலைபே றடைகின்றது. ஆண்மக்களையும் பெண்மக்களையும் அலைக்கின்ற அக் கட்டுக்கடங்காக் காமமானது, இவ்வழகினிடையே தன் வேகத்தை அடக்கிக்கொண்டு, நன்மைக்கடலில் கலந்தவொரு காட்டாற்றின் வெள்ளம்போல், பரிபூரண அமைதியை அடைகின்றது. ஆதலாற்றான், அத்தகைய காதலானது, மென்மையும் ஒழுக்கமும் இல்லா மோகத்தை விட உயர்ந்ததும் அதிசயம் வாய்ந்ததாகவும் இருக்கின்றது.

* * *

இவ்வாசகத்தின்கண் அடங்கிய உண்மையின் உயரத்தை மண்ணிலேயே கண்வைத்துழலும் மாந்தர் எங்ஙனம் காண இயலும். மண்ணினின்று கண்ணைச் சற்றே நிமிரவைக்கின்ற சாதனங்கள் கைவராவரையில் இவைதாம் பயன்படா. மற்று, இவைபயன்படாவரையில் வேறொன்று இவ்வுலகில் பயனுறப் பெறுவதற்கும் இல்லையே.

கட்டுப்பாடு அமைந்த மனைவாழ்க்கையின் சித்திரத்தோடு இணங்கியவொரு ஆன்மவிடுதலையின் வித்தகமும்சேர்ந்து இந்தியர்களுக்கே சிறப்பாய இருபெருந் தத்துவங்கள் ஆகின்றன என்று சாற்றுகின்றார் இரவீந்திரநாதர். தத்துவங்கள் எங்கும் இருக்கின்றன. ஆயினும் அவைகளைக் காணல் வேண்டுமே. சித்திரப் பதுமைகள் வைக்கப்பெற்றிருக்கின்ற வோர் இருட்டறையின்கண் சென்றானொருவன் ஒன்றுங் கண்டின்றியே திரும்பிவிடுகின்றனன். அன்னவாறே, தத்துவங்கள்தாம் குறைவறத் தழைத்திருப்பினும், அவைகளை ஒளிசெய்து காட்டுவாரிலராயின், மாந்தர் அதன் தூய பயனைப்பெறாது தீர்கின்றனர். இது நேராவண்ணம் தத்துவங்களின் தகைமை நமக்குத் தோன்றும்படி ஒளிசெய்து காட்டவல்ல மேன்மையோர் கலைஞர். கம்பர் காளிதாசன் ஷேக்ஸ்பியர் அனைய கலைவாணர் கதையென்றும் வருணனை என்றும் நாடகம் என்றும் பல துறைகளைத் தலைக்கீடாகக் கொண்டு, அவைகளை உவப்போர் உள்ளம் உய்யும்படி மொழிகொண் டிழைக்கும் மேன்மையால் கலையொளி தயங்கத் தத்துவங்களைத் தோற்றுவிக்கின்றனர். இவர்தாம் இருந்ததில்லையாயின் இவ்வுலகம் இன்று இன்னும் எப்படி இருக்குமோ யார் அறிவார். தவத்தின் தவிசையே அத்திவாரமாகக்கொண்டு இல்வாழ்க்கையின் தத்துவத்தைக் காளிதாசன் அமைத்திருக்கின்ற நீர்மை, சாகுந்தல நாடகத்தின் நன்மையாற்பெருகும் உணர்வினாலன்றி நாம் எத்துணை எண்ணி எண்ணிப் பார்த்தாலும் எட்டாமல் அகன்று செல்லும். துறவினால் நிறைவடைகின்ற காதலின் அழகை, சாகுந்தலத்தில் காண்கின்றவர், "தன்னையுந் துறக்குந் தன்மை காமத்தே தங்கிற்றன்றே" என்று பாடிய கம்பரடிக்கு ஆதாரமாயிருந்த நிகழ்ச்சிநயங்களைக் கொண்டு அளந்தறியுமெல்லையில் ஆருயிர் அங்ஙனே அமைதி பெறும். கட்டுப்பாடினோடிணைந்த அழகுவாய்ந்த ஆன்மவிடுதலையின் தத்துவத்தை, கவி இரவீந்திரர் இயம்பும் வண்ணம், காளிதாசனது நாடகத்துள் நம் மனம் நாடி யுணர்கின்ற செவ்வியில், அவ்வழகோ இல்லாமல் பொய்யேபடைத்த மற்றைய விடுதலை என்னும் சொல்லின் இழிவை, "விடுதலை அடேயடே, விடுதலை" என்று முழங்குகின்ற வீரகுரூபி காலிபன் விளம்பிய பரிசு நம் நினைவிற்றோன்றி உறுதிசெய்தல் வேண்டும். இதனை முழங்கும்போது, கக்கக் காலிபான் மதுவின் புதுவெறியும் சிறிது கொண்டிருந்தான் என்பதையும் நினைத்துக்கொள்வது நலம்.

கலையின் ஒளியால் தத்துவத்தைக்கண்டு அதன் அழகினைத் தழுவிக்கொள்ள வல்லவர்களாகின்றோம் என்னும் வாய்மை இதுவாக, இனி அக் கலைப்பொருள்களைக் கற்பதற்குரிய பயிற்சி யில்லையாயின், ஒரு அறையின்கண் சித்திரப் பதுமைகளும், அப்பதுமைகளின்மீது கதிரவன் ஒளியும் குறைவற இருந்தபோதிலும் கண்ணிலான் ஒருவன் உட்சென்று ஒன்றுங் காணாமல் திகைப்பதுபோல், கலைத்திறம் நுனித்துணர்தற்கேற்ற பயிற்சிபெறாதவர், பயனுடைவாழ்க்கைக்கு அயலாவார் என்பதைச் செப்பவும் வேண்டுமோ! இந்தியர் பண்டைய பெருமை என்று கண்டதை யெல்லாங் காட்டிக் காட்டிக் கழறாமல், நம்முடைய விடுதலை என்றுகேட்டதையெல்லாம் சொல்லிச்சொல்லிக்கிளராமல், உணர்வின் நுண்மைக்கொக்க அறிவின் ஆழமும், இவ்விரண்டிற்கும் ஏற்றபடி நம்பால் அன்பும் வாய்ந்த பெரியார் இரவீந்திரநாதர், சிறப்பாக எடுத்துக்காட்டிய அழகின் தத்துவத்திற்றிகழும் மனைவாழ்க்கையின் மாண்பையும் அதனோடு முரண்படாத ஆன்மவிடுதலையின் அரிய இரகசியத்தையும் நுனித்துணர்ந்து மாந்தர் நலம்பெறும்வண்ணம், கலையுணர்வின் பெருக்கத்தையே கருத்தில்வைத்து நடக்கின்றது நம் கலாநிலயம்; கலைபொலியம் நூல்களைக் கற்பதற்கியன்ற கல்வியையும், அஃதில்லோர்க்குக் கற்றுத்தருகின்றது.

ஆசையை அறவே நீக்கி வறளவல்லார் யாண்டும் இலர். அகங்காரத்தை அடியுடன் அகற்றி அணைக்க வல்லார் என்றும் இலர். எனினும், மாநுடப் பிறப்பியற்கை இவையாதலில் இவைகளுக்கிடையே அகப்பட்டு அல்லலுற்று அலைதர மாள்வதே மாந்தர் கடன் என்பது நியதியன்று. வேகமுடன் மண்டிவரும் ஆசையைத் தடுப்பதற்கும் வறட்டுவதற்கு முயல்வதற்கெதிர் அதனை நன்மைக் கடலுள் பாய்ச்சிவிட்டால், அமைதி யடைகின்றோம். தலையெடுத்து மேல்நிமிரும் அகங்காரத்தை நசுக்க முயல்வதனினும், விண்ணளவு வளர்த்து, பிரபஞ்சமடங்கலும் 'நானே' என்னும்படி உயர்த்திவிட்டால், அமைதியடைகின்றோம். ஆசை அகங்காரங்களினும் சிறியன சிந்தியாமல், கடலின் ஆழத்தையும் விண்ணின் உயரத்தையும் கருதிக் கலப்போமாயின், சாந்தநிலை சாதித்துவிட்டோம். கருத்தினது ஆழத்தையும் எண்ணத்தின் உயரத்தையும் எட்டுதற்கியன்ற மாட்சி கலையின் திறத்தே யுளது. அதனைக் காட்டித் தருகின்றது கலாநிலயம்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[610-வது பக்கத் தொடர்ச்சி]

ஆசை புத்து வென்றவ னசை யோன்று வென்றிலன்.

தேவியை நிருதன் தீண்டினானலன்எனத் தேறிச்சிறிதாறிய சினத்தனாய சடாயு இராவணற்கினி அறிவுறுத்துஞ் சொற்கள் சில சொல்லலுற்றான்:—

கெட்டாய் கிளையோ டுநின்வாழ் வையெலாஞ்
சுட்டா யிதுவென் னதொடங் கினைநீ
பட்டா யெனவே கொடுபத் தினியை
விட்டே குதியால் விளிகின் றிலையால்

[அருங்கேடு அடைந்தாய், உன் கிளைஞரோடு உன் வாழ்வையும் சுட்டெரித்தாய். இந்தக் காரியத்தை எதற்குத் தொடங்கினாய். நீ இவளைக் கொண்டுசெல்வாயானால் உன் உயிர் இழப்பது நிச்சயம்என்பதை எண்ணிக்கொண்டு விட்டுவிட்டுப் போனால் பிழைப்பாய்]

பேதாய் பிழைசெய் தனைபே ருலகின்
மாதா வனையா ளைமனக் கொடுநீ
யாதா கநினைத் தனையெண் ணமிலாய்
ஆதா ரநினக் கினியா ருளரோ.

[அறிவில்லாதவனே, நீ பெரும் பிழை செய்தாய்; இப்பெரிய உலகத்திற்குத் தாய்போன்ற இவளை, நீ என்னவென்று மனங்கொண்டு நினைத்துவிட்டாய். ஆலோசனையற்றவனே, எம்பெருமான் திறத்தில் அபராதஞ்செய்துவிட்டுப்பின் அன்னையையும்பகைகொண்டுவிட்டால், இனி உன் சார்புநின்றுஉனக்குஉதவியாகக்கூடியவர் யார் இருக்கின்றனர்.]

என்றியம்பி, இராமனக்குப் பிழைசெய்தார் பிழைக்காத அவன் அம்பிற்கு உடையாமல் உய்யமாட்டார் என்ற தன் சொல்லை மெய்ப்பிக்கப் பின்னும் இயம்புவான்—

உய்யா மன்மலைந் துமரா ருயிரை
மெய்யா கவிரா மன்விருந் திடவே
கையா ரமுகந் துகொடந் தகனார்
ஐயா புதிதுண் டதறிந் திலையோ.

[உன் இனத்தவராகிய கரன் முதலிய அரக்கர் பிழைக்கமாட்டாதபடி இராமன் போர்செய்து, அவர்தம் அருமையான உயிரை உண்மையாக விருந்தளிக்க யமனானவன் கைநிறைய வாரியெடுத்துச் சிறிதுகாலத்திற்குமுன்னரே உண்டசெய்தியை, ஐயா, நீ அறியாயோ]

காகுத்தன் முன் தாடகைக் கொடியாளைக்கொன்று வீழ்த்திய வக் கன்னிப்போரில், அரக்கர்தம் குலத்துயிர் குடிக்க வஞ்சி ஆசையா லுழன்ற கூற்றிற்குச் சுவை சிறிது காட்டிப் பின் கரனை முதலிய நிருத வீரரைவென்று புதுவிருந் திட்டானெனின், இனி இராவணாதியர் விழும்நாள் அந்தகனார்க்கது யாவதாகுமோ அறிகிலேம். இராமன் சீற்றத்தை இராவணன் காத்தலரிது சீதையை வஞ்சித்து அவன் பிழைத்தலுமரிது-,

கொடுவெங் கரிகொல் லியவந் ததன்மேல்
விடுமுண் டைகடா வவிரும் பினையே
அடுமென் பதுணர்ந் திலையா யினும்வன்
கடுவுண் டுயிரின் னிலைகா ணுதியோ.

[உன்னைக்கொல்ல வந்த கொடிய கோபமுடைய யானையின்மீது, விடுகின்ற மண்ணுண்டையை வீசித்தடுப்பதற்கு நினைத்தனையே. கொல்லும் என்பது அறியா யாயினும், கொடியவிஷத்தை உண்டு பின் உன்உயிர் நிலைத்திருக்கக் காண்பாயோ]

எல்லா வுலகங் களுமிந் திரனும்
அல்லா தவர்மூ வருமந் தகனும்
புல்வாய் புலிகண் டதுபோல் வரலால்
வில்லா ளரைவெல் லுமிடுக்குளரோ

[அனைத்து உலகங்களி லிருப்பவர்களும், தேவேந்திரனும், இவர்களல்லாத திரிமூர்த்திகளும், எமனும், புலியைக் கண்ட மான்களைப்போல் ஆவாரேயல்லாமல் இராமஇலக்குமணர்களை வெல்லவல்ல வலிமையுடையவர்களோ]

இம்மைக் குறவோ டுமிறந் தழியும்
வெம்மைத் தொழிலிங் கிதன்மே லிலையால்
அம்மைக் கருமா நரகந் தருமால்
எம்மைக் கிதமா கவிதெண் ணினைநீ

[இம்மையில் உன் சுற்றத்தாரோடும்செத்து அழிவதற்குரிய கொடியகாரியம் இதன்மேல்இல்லை. மறுமையினும் மீள்வதற்கரிய பெரிய நரகத்தைக்கொடுக்கும் - எனின், எதற்கு இதனை நன்மையாக எண்ணினாய் நீ]

முத்தே வரின்மூ லமுதற் பொருளாம்
அத்தே வரிம்மா னிடரா தலினால்
எத்தே வரொடெண் ணுவதெண் ணமிலாப்
பித்தே றினையா தல்பிழைத் தனையால்

[இந்த மனிதர், மூன்று மூர்த்திகளுக்கும் மூலப்பொருளாகிய அந்தத் தேவர் ஆவதால், இவரை எந்தத் தேவரோடு சேர்த்து எண்ணுவது; எண்ணமில்லாத பைத்தியங் கொண்டனை யாதலால் இப்பிழை செய்தனை]

புரம்பற் றியபோர் விடையோ னருளால்
வரம்பெற் றவுமற் றுளவிஞ் சைகளும்
உரம்பெற் றனவா வனவுண் மையினோன்
சரம்பற் றியசா பம்விடுந் தனையே

[திரிபுரங்கள் எரியும்படி போர்செய்த, இரஷபவாகனனான சிவபிரானது அருளால் நீ பெற்றுள்ள வரங்களும் மற்றும் உன்னுடைய வித்தைகளும், மெய்ப்பொருளாகிய இராமன் வில்லில் வைத்த அம்பை விடும்வரையில்தான் தம் வல்லமையைக் காட்டக்கூடியனவா யிருக்கும்]

தீயோரும் கேடடைய விரும்பார் மேலோர். இராவணனை அங்ஙனே தானே யழிக்கவும்வேண்டினானலன் சடாயு; இராமனால் அவன் அழிவுண்ணவேண்டுமென்பதும் அவன் கருத்தன்று. தீண்டாத கற்புடைய சீதையை அவன் விட்டுச்சென்றால் போதுமென்பதே இவன் சிந்தனை. ஆதலின்,

வானாள் பவன்மைந் தன்வளைத் தவிலான்
தானே வரினின் றுதடுப் பரிதால்
நானே யவனுய்ப் பெனிந்நன் னுதலைப்
போநீ கடிதென் றுபுகன் றிடலும்

[விண்ணுலகை யடைந்திருக்கின்ற தயரதசக்ரவர்த்தியின் புதல்வனாகிய இராகவன் வளைத்த வில்லினனாகித் தானே வந்துவிடுவானாயின், பிறகு உனக்கு உண்டாகும் கேட்டினை நேர்நின்று எவராலும் தடுக்க இயலாது. ஆகையால் நீ விரைந்து ஓடிப்போ, நானே இவ் வழகிய நெற்றியுடையவளை அழைத்துப்போய்இராமன்பால்சேர்ப்பேன், என்று சடாயு சொல்லவும்—]

இதற்கிணங்கவோ இராவணன் சீதையை வெளவினுன்? அச்சமே கீழ்களது ஆசாரம் என்ப துண்மையே. எனினும், ஆசைக்கோ இந்த ஆசாரமும் இல்லை. எனின்,

கேட்டா னிருதர்க் கிறைகேழ் கிளர்தன்
வாட்டா ரைநெருப் புகவாய் மடியா
ஒட்டா யினிநீ யுரைசெய் குநரைக்
காட்டாய் கடிதென் றுகனன் றுரையா

[சடாயு கூறியதைக் கேட்ட அரக்கர் தலைவன், ஒளி வீசுகின்ற தன் கொடிய கண் விழிகளினின்று நெருப்புச் சிந்த வாயை மடித்து, வெருவுற என்னைச் சும்மா ஓட்ட வேண்டா; இனி நீ சொல்கின்றவர்களை எனக்கு விரைவில் காட்டுவாயாக, என்று சொல்லி]

முன்னைய பிறவியில் இவன் தன் தனி மைந்தனைக் கேட்டவாங்கே 'நீ உரைசெய்குநரை'க் கடிதின் காட்டும்படி அறைகூவிப் பின்,

வரும்புண் டரம்வா ளியின்மார் புருவிப்
பெரும்புண் டிறவா வகைபே ருதிநீ
இரும்புண் டநீர்மீள் கினுமென் னுழையிற்
கரும்புண் டசொன்மீள் கிலள்கா ணுதியால்

[எனக்கு எதிரே வருகின்ற கழுகே, எனது அம்பினுல் உன்மார்பு உருவிப் பிளந்து பெரிய புண்ணுகத் திறக்காதபடி நீயே போகக்கடவாயாக. காய்ச்சின இரும்பு குடித்த நீரானது ஒருபோது வெளிப்பட்டாலும், என்னிடத்தில் இருக்கின்ற இந்தக் கரும்புபோன்ற சொற்களைப் பேசுபவள் மீளமாட்டாள். இதனை அறிந்துகொள்]

என்று தன் உள்ளத்துறுதியை இராவணன் இறுதியுற உரைத்துவிட்டான். சடாயுவைக் கண்டவுடன் தன் மனத்துதித்த ஒருசிறு நம்பிக்கையையும் இப்பொழுது இழந்தனள்.

என்னும் மளவிற் பயமுன்னி னிரட்டி யெய்த
வன்ன மயர்கின் றதுநோக்கி யரக்கன் யாக்கை
சின்னம் முறுமிப் பொழுதேசிலை யேந்தி நங்கண்
மன்னன் மகன் வந்திலனென்று வருந்த லன்னை

[என்று இராவணன் சொன்னவுடன் அன்னம்போன்ற சீதை முன்னினும் இருமடங்கு அச்சம் அடைந்து தளர்வதைச் சடாயு நோக்கி, "தாயே, இந்த அரக்கனது உடல் இப்பொழுதே துண்டுதுண்டாகப் போகும். நமது மன்னன் மகனுகிய இராமன் வில்லை ஏந்தி வரவில்லையே என்று வருந்தாதே]

முத்துக் கனபோன் முகத்தாலி முலைக்கண் வீழத்
தத்துற் றயரே றலைதால பலத்தி னேலுங்
[வாசை கொத்தொப் பனகொண் டிவன்கொண்டன வென்ற
பத்திற் குமின்றே பலியீ வது பார்த்தி யென்றுன்.

[முத்துக்கள் உதிர்வனபோல் உன் முகத்திலே வழிகின்ற கண்ணீர்த் துளிகள் உன் கொங்கைகளில் விழும்படி துடித்துத் தளராதே. பனம்பழங்களின் நிறைந்த குலைபோன்ற இவன் தலைகளைக்கொண்டு, இவன் வென்று கொண்டனவாகக் கூறிய பத்துத் திக்குக்களுக்கும் இப்பொழுதே நான் பலியிடுவதைப்பார்—என்றுன்]

இச் சொற்களுக்கேற்ற செயல் தொடர உடனே அவ்விருவருக்குங் கடும்போருந்தொடங்கியது. போரிது தொடங்குமுன் வடமொழிச் சடாயு நிகழ்த்திய கட்டுரையையும் சிறிதிங்குக் கருத்துட் கொள்ளலாம்.

"அந்தச் சத்தத்தைச் சிறிது தூங்கிக்கொண்டிருந்த ஜடாயு கேட்டு எழுந்து இராவணனையும் சீதையையும் கண்டார். அதன் பிறகு மலையின் சிகரம்போன்ற கூரிய மூக்குடைய அப்புள்ளரசர் மரத்தில் இருந்தபடியே இராவணனைப் பார்த்து "தம்பி தசக்கிரீவ, நான் பழமையான தருமங்களை அநுஷ்டித்து உண்மையைக் கைப்பற்றினவன். என் பெயர் ஜடாயு; பலம்பொருந்திய கழுகுகளுக்கரசன். தசரத குமாரராகிய இராமர் உலகத்துக்கெல்லாம் இறைவர்; இந்திரனுக்கும் வருணனுக்கும் ஒப்பானவர்; எல்லாப் பிராணிகளுக்கும் எப்பொழுதும் நன்மையே செய்பவர். நீ இப்பொழுது தூக்கிக்கொண்டு போகும் இந்த மிக அழகிய பெரும் புகழ்பெற்ற சீதை அவ் வுலோகநாதருடைய தரும பத்தினி. குடிகளைப் பாதுகாக்கும் அரசனுகிய உனக்குப் பிறன்மனைவியைக் கைப்பற்றுவது தகுமா? மஹா பலம்பொருந்தியவனே, அரசர் மனைவியர்களை நீ முக்கியமாக ஆதரவுடன் பாதுகாக்க வேண்டுமே? ஆகையால், பிறர் மனைவியர்களைத் துன்பப்படுத்த நீ கொண்ட இந்த இழிவான கருத்தை விட்டுவிடு. தீரனுயுள்ளவன் நிந்தைக்கிடனுய தொழிலை ஒருபொழுதும் செய்யமாட்டான். அவன் பிறர் மனைவியர்களையும் தன் மனைவியைப்போல வேறொருவர் தீண்டாதபடி பாதுகாப்பான். நல்ல மன்னவர்கள் சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட தருமார்த்த காமங்கள் அல்லாதவைகளைச் செய்யமாட்டார்கள். அரசனே தருமார்த்த காமங்களுக்கெல்லாம் இருப்பிடம். தருமம், புண்ணியம், பாவம் எல்லாம் அரசனையே மூலகாரணமாக உடையன. ராக்ஷசோத்தமா, நீ பாவியும் கொடிய காமியுமாய் உள்ளாய். பாவி சுவர்க்கலோகத்தை அடைந்தாற்போல நீ எவ்வாறு சம்பத்தை அடைந்தாய்? அவனுக்கு எது இயற்கையோ அதைச் சீர்திருத்த ஒருவராலும் முடியாது. கொடியவர்களிடத்தில் நல்ல உபதேசம் கொஞ்சமேனும் தங்காது. மகா பலம்பொருந்திய தருமாத்துமாவாகிய இராமர் உனது தேசத்திலாவது உனது நகரத்திலாவது ஒருவகைத் தீங்கும் பண்ணவில்லை. அப்படியிருக்க அவருக்கு நீ ஏன் தீங்கு பண்ணுகிறுய்? சூர்ப்பணகையின்பொருட்டு ஜனஸ்தானத்திலிருந்த கொடிய கரன் தனக்கொரு தீங்கும் செய்யாத இராமரை எதிர்த்து அவரால் வதைக்கப்பட்டான். அதில் இராமர் செய்த குற்றம் என்ன? பின்னர் உலகத்துக்கெல்லாம் அரசராகிய அவர் மனைவியை நீ ஏன் தூக்கிக்கொண்டு போகின்றனை? நீ சீதையை உடனே விட்டுவிடு; இல்லாவிடில், இந்திரனுடைய வச்சிராயுதம் விருத்திராசுரனை எரித்ததுபோல, அக்கினிக்கொப்பான இராமருடைய கண்கள் உன்னை எரித்துவிடும். உன் துணியில் கொடிய விஷப்பாம்பை நீ முடிந்துகொண்டா யென்பதை நீ அறியவில்லையா? உன் கழுத்தில் யமனுடைய பாசத்தை நீ மாட்டிக்கொண்டா யென்பதை நீ அறியவில்லையா? சுமக்கக்கூடிய பாரத்தையன்றோ ஒருவன் எடுக்கவேண்டும்? புசித்தால் சுகமாகச் செரிக்கும் உணவையன்றோ ஒருவன் புசிக்கவேண்டும்? தருமம், கீர்த்தி, புகழ், பெருமை முதலியவைகளைத் தராததும் தேகத்துக்குச் சிரமம் தருவதுமாகிய காரியத்தை யார்செய்வான்? ஓ இராவணா, எனக்கு வயது அறுபதினுயிரமாகின்றது. நான் இதுவரையில் எனது மூதாதைகளிடமிருந்து எனக்குக்கிடைத்த இராச்சியத்தை நன்றுகப் பாதுகாத்து வருகின்றேன். நான் வயதுசென்றவனுயினும் என்முன் சிறுவயதுள்ளவனும் கையில் விற்பிடித்துத் தேகத்தில் கவசமணிந்து இரதத்திலேறிச் செல்பவனுமாகிய நீ சீதையை எளிதில் தூக்கிக்கொண்டு போகமாட்டாய். என்றும் உள்ளதும் மாற்றமுடியாததுமான உண்மையை உணர்த்தும் வேதங்களையும் சுருதிகளையும் தர்க்கசாஸ்திர யுக்திகளைக்கொண்டு அழிக்க எவ்வாறுமுடியாதோ அதுபோல் என்னுடைய கண்முன்பாக நீ சீதையைப் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டுபோக முடியாது. நீ சூரனுனல் கொஞ்ச நேரம் காத்திருந்து இராமர்முன் நின்று போர்புரி. அப்போது கரனைப்போல் நீயும் மாண்டுவிழுந்து பூமியைத்தழுவுவாய். அடிக்கடி தைத்தியர்களையும் தாணவர்

களையும் பலதரம் யுத்தத்தில் கொன்ற இராமர் மரவுரி உடுத்து உன்னையும் ஒரு நொடியில் வதைப்பார். அவ்விரு ராசகுமாரர்களும் நெடுந்தூரம் போயிருக்கிறுர்கள்; நான் இப்போது என்ன செய்வேன்? கீழ்மகனே, அவர்களை நீ கண்டமாத்திரத்தில் பயத்தால் நடுங்கி நாசமடைவாய். நா னுயிருடன் இருக்கும்வரையில் இராமருடைய காதலியாகிய தமாரைமலருக் கொப்பான கண்களையுடைய நற்குணமுள்ள சீதையைநீஎடுத்துக்கொண்டுபோகமுடியாது. நான் என் உயிரைக்கொடுத்தாவது மகாத்துமாக்களாகிய இராமருக்கும் தசரதருக்கும் உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். நில்லடா தசக்கிரீவா, கணப்பொழுது நின்று பார். ஓ நிசிசர, என்னுல் கூடியவரையில் நான் உனக்குப் போர்விருந் தளிக்கின்றேன். காம்பினின்று பழத்தைப் பறித்தெறிவதுபோல இவ்விரதத்திலிருந்து உன்னைக் கீழே தள்ளுகிறேன்" என்று சொன்னுர்.

"தம்பி தசக்கிரீவ" என்று பஞ்சதந்திரக் கதைக்குரிய வாய்பாட்டில் துவக்குவதுமன்றி, உதாரணங்களும் உவமைகளும் நிறைந்த இந்த இதோபதேசம், பாரேனும் யாருக்கேனும் நிகழ்த்தவல்லதா யிருக்கும் திறத்திலும், கரடகதமனக சம்வாதங்களை இச்சடாயுவின் நெடிய சொற்கள் நமக்கு நினைப்பூட்டுகின்றன. அரைக்கோடி ஆயுள் நடந்திருக்கின்ற அரக்கனுக்கு அறுபதினுயிரவருடங்களே நிறைந்துள்ள இக்கழுகு குழந்தையெனத் தோன்றல்போக, அப் புண்டரம் இத் தசகண்டனைத் 'தம்பி,' என் றழைத்தது, பரிகசமுறப் பகர்ந்த வொரு பரிசாகுமோவென் றெண்ண இடமிலாவகைப் பின்னர் இராவணனை உண்மையே சிறு வயதுடையவன் என்ன எண்ணிப்பேச நேர்கின்றது. முதுமையால் விளைந்தவோர் கலக்கம் போலும் இது. அறுபதினுயிரம் ஆண்டுகளுக்குள் ஆற்றுத் தளர்ச்சி எய்திவிட்டது இக்கழுகு என்பதற்கு, அது வெளிப்பட விளம்பிய தன்றியேயும், சான்றுகள் சிலவுள. ஒருவனுடைய இயற்கையைச் சீர்திருத்த இயலாதென்பதும், கொடியவர்களிடத்தில் நல்ல உபதேசம் சிறிதேனும் தங்காதென்பதும் தெரிந்திருந்தும், துவக்கிய உரையை நிறுத்தமாட்டாமல் நாவினை ஓட்டுந் திறம் மூப்பினது முதலுரிமை. வாயின் வழிகின்ற வீரத்தளவு மனத்தின் திட்பம் ஒவ்வாமையும் முதுமையின் முழக்கம். கணப்பொழுது நின்று தசக்கிரீவனை என்ன பார்க்கச்சொல்கின்றது இப்பறவை? தன்னுல் கூடியவரையில் போர்விருந் தளித்து இராமருக்கும் தசரதனுக்கும் உதவியாகத் தன் உயிரைக் கொடுப்பதன்றி வேறன்று. 'மறியல்' செய்தலுக்கேற்ற மனநிலையே யிது. எனின், காம்பினின்று பழத்தைப் பறித்தெறியும் உவமை யொன்றையே கம்பர் அந்தச் சடாயுவின் வாயிலிருந்து வாங்கிக்கொண்டு மற்றவைகளை யெல்லாம் கழித்துவிட்டது வியப்பன்று. இதனேடு, இராவணன்கொண்ட ஆசைக்கே அவன் தலைகளைப் பலியாக்கும் பெற்றியையும் இவர்சேர்த்துக்கொண்டார். முன் இராவணன் ஆசைகளை வென்றுன்; சீதையின்மேல் வைத்த ஆசை இப்பொழுது இவனை வென்று இவன் தலைகள் பத்தையும் தனக்குப் பலியாக்கிக்கொள்ளுமாயின் சிலேடை என்னும் நலத்தினுலேனும் தன்பழியைத் தீர்த்துக்கொண்டவாறு தக்கதேயாம்.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

[604-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 3.

இடம்:—தீவின் மற்றோர்புறம்

அன்டோனியோ, ஸபஸ்ட்டியன், கன்ஸாலோ, ஏட்ரியன், ப்ரான்ஸிஸ்க்கோ, அலான்ஸோ, ஆகிய இவர்களும், மற்றவர்களும் வருகின்றனர்.

கன்ஸாலோ:—தெய்வசாட்சியாக, என்னுல் ஐயா இதன்மேற் செல்லஇயலாது. பழைய என் எலும்புகள் நோகின்றன. நேர்வழியூடும் சுற்றுவழி யூடுமாக இங்கோர் சிக்கலிடம் மிதிபட்டது நிச்சயம் (1)! உன் அறுமதியின்மேல், என்னை நான் இளைப்பாற்றிக்கொள்ளத்தான் வேண்டும்.

அலான்ஸோ:—முதியோய், பிரபுவே, ஆவி மழுங்கும்படி களைப்பால் கைப்பற்றப்பட்டிருக்கின்ற நானே உன்னைக் குறைகூற இயலாது. உட்கார்ந்து களை தீர்த்துக்கொள். இனியும் என் இச்சகனை வைத்துக்கொள்ளாமல், எனது நம்பிக்கையை இவ்விடத்திற் றனே விலக்கிவிடுவேன் (2). தேடி நாம் இப்படி அலைகின்ற அவன் முழுகிவிட்டான். தரையிலே நாம் வீணுகத் தேடுவதைக் கண்டு கடலும் ஏளனம் செய்கின்றது (3). நன்று, போகட்டும் அவன் (4).

அன்டோனியோ:—(ஸபஸ்ட்டியனுக்கு ஒருபுறமாய்) இவன் இத்துணை நம்பிக்கைஇழந்திருப்பதற்கு நான் முழுவதும் மகிழ்கின்றேன். முன் முடிக்கத்

அன்டோனியா—ப்ராஸ்ப்பீரோவின் தம்பி
ஸபஸ்ட்டியன்—அலான்ஸோவின் தம்பி.
கன்ஸாலோ—அலான்ஸோவைச் சேர்ந்த பிரபு. முதியவன் ப்ராஸ்ப்பீரோவிற்கு ஆதியில் உதவிசெய்தவன்.
ஏட்ரியன், ப்ரான்ஸிஸ்க்கோ } அலான்ஸோவைச் சேர்ந்த பிரபுக்கள்.
அலான்ஸோ—நேப்ல்ஸ் அரசன்

இரண்டாவது அங்கம் முதற்களத்தின் இறுதியில் பர்டினண்டைத் தேடப்புறப்பட்டவர்கள், அலைந்து களைத்து வந்துசேர்கின்றனர்.

(1) சிக்கலிடம் - உள்சென்றவர் எளிதில் வெளிவரமாட்டாமல் கலங்கும்படி வழிகள் ஒன்றோடொன்று பின்னி மயங்கி இருக்கும் இடம். மிதிபட்டது - நம்மால் சுற்றிச் சுற்றி நடக்கப்பட்டது.

(2) பர்டினண்ட் முழுகிவிட்டானுனுலும், ஒருவேளை அவன் முழுகாமல் தப்பி நம்முன் தென்படலாம் என்ற நம்பிக்கையானது, இல்லாததைச் சொல்லி இச்சகம்பேசுபவனைப்போல், என் ஊக்கத்தைத் தாங்கியிருந்தது. இவ்வளவு தேடியும் காணுமையால் அந்த நம்பிக்கையைஇப்பொழுது அடியோடு அகற்றிவிடுவேன்.

(3) கடலானது, தனக்குள்ளே அமிழ்ந்து கிடக்கின்ற பர்டினண்டை, வீணுக நாம் தரையிலே தேடுவது கண்டு பரிகசிப்பதுபோல் அலைகள் வீசி ஆராவாரம் செய்கின்றது—தற்குறிப்பேற்றம்.

(4) அரசன், துயரம் மேலிடக் கையறுநிலையிற் கூறியது.

(5) நோக்கம் - அலான்ஸோவைக் கொன்று தானே அரசனுகவேண்டியது.

ஒருமுறை பின் இடைந்தது - துயின்றிருந்த அரசனை இவர் குத்தப்போனபோது கன்ஸாலோ விழித்துக் கூவியதால் அக்காரியம் இடையூறடைந்தது.

துணிந்த உன்நோக்கத்தை, ஒருமுறை பின்னிடைந்ததுபற்றி விட்டுவிடாதே (5).

ஸபஸ்ட்டியன்:—(அன்டோனியோவிற்கு ஒருபுறமாய்) அடுத்தபடி வாய்க்கின்ற சமயத்தை இறுதிவரையில் ஏற்றுக்கொள்வோம் (6).

அன்டோனியோ:—(ஸபஸ்ட்டியனிற்கு ஒருபுறமாய்) அது இன்றிரவே யாகட்டும்; ஏனெனில் இப்பொழுது இவர்கள்தாம் வழிநடையால் மிகவும் வருந்தியிருக்கின்றார்களாதலால், முதலிலே இருந்தது போல் அத்துணை விழிப்பு வைக்கமாட்டார், இயலவும் இயலாது.

ஸபஸ்ட்டியன்:—(அன்டோனியோவிற்கு ஒருபுறமாய்) இன்றிரவே என்கின்றேன். அவ்வளவுதான்.

[கம்பீரமும் ஆச்சரியமுமான சங்கீதம் கேட்கின்றது.]

அலான்ஸோ:—என்ன இன்னிசை இது? நல்லவென் நண்பர்காள் கேளுங்கள்.

கன்ஸாலோ:—அதிசய இனிமை வாய்ந்த சங்கீதம்!

* * *

[மேலே ப்ராஸ்ப்பீரோ கண்ணுக்குத் தென்படாமல் வருகின்றான். கீழே, நூதன உருவங்கள் பல விருந்திற்குரிய உணவுகளைக் கொண்டுவந்து வைத்து அதனைச்சுற்றி வந்தனங்கள் புரிவனவாகி நடனம்செய்து, பிறகு, அரசன் முதலியவர்களை உண்பதற்கு அழைப்பனபோல் அபிநயங்கள் காட்டிவிட்டுப் போய்விடுகின்றன] (7).

* * *

அலான்ஸோ:—விண்ணவர்காள், எங்களைக் காப்பதற்கு அன்புடைய தெய்வங்களை அனுப்பியருளுங்கள் (8)—யாவையே இவை?

ஸபஸ்ட்டியன்:—உயிருடைப் பொம்மலாட்டம் (9). யூனிக்காரன்கள் இருக்கின்றனவென்று இனி நம்புவேன் (10). இனி அரேபியா தேசத்தில், பீனிக்ஸ் அரியணையாம் ஒருமரம், இருக்கின்றது; இந்தப் பொழுதில் ஒரு பீனிக்ஸ் ஆங்கே ஆண்டுகொண்டிருக்கின்றது (11).

அன்டோனியோ:—இரண்டையும் நம்புவேன் நான். இன்னும் நம்பத்தகாத எதுதான் இருப்பினும் என்வயின் வரட்டும், அது உண்மையே என ஆணையிடுவேன் (12). ஊரிலுள்ள மடையர்கள் அவர்களைப் பழி கூறுகின்றார்களாயினும் சுற்றுப்பிரயாணிகள் ஒருபோதும் பொய் சொன்னதில்லை (13).

கன்ஸாலோ:—இப்பொழுது இதனை நான் நேப்ல்ஸில் விளம்புவேனாயின் என்னை நம்புவார்களா? இத்தகைய தீவினர்களைக் கண்டேனென்று நான் சொன்னால்—நிச்சயம் இவர் இந்தத் தீவின் சனங்களே, இவர் விபரித உருவத்தினராயினும், பாருங்கள், அவர்களது ஒழுக்க பாவனைகள் நம் மானுட இனத்தின் பலர்மாட்டு, ஏன் யார்மாட்டும், காண்பதனினும் அதிக மென்மையும் அன்பும் வாய்ந்தனவா யிருக்கின்றன (14).

ப்ராஸ்ப்பீரோ:—(ஒரு புறமாய்) உண்மையுடைய பிரபுவே, நனிசெப்பினை. இங்கிருக்கின்ற உங்களிற் சிலர் பேயினும் தாழ்ந்தவர்களே (15).

அலான்ஸோ:—இன்ன வடிவங்கள், இன்ன அபிநயங்கள், நாவின் பயன் இவைகளுக் கில்லையாயினும்-மிகச் சிறந்த ஊமைஉரையாடு வகைகாட்டு மிவைகளை யான் எத்துணை வியந்தாலும் பற்றாது.

(6) மறுபடி சமயம் நேர்ந்தவுடன் நாம் அதனை அறைகுறையாக விடாமல் காரியத்தை முடித்தே தீர்வோம்.

(7) இந்த விருந்து ப்ராஸ்ப்பீரோவின் மந்திர வித்தையால் அமைக்கப்பெறுகின்றது. எண்ணிய விடத்தில் வேண்டிய உணவுப் பொருள்களைக் கொணர்வித்தல் மந்திரவாதிகளின் வித்தைகளில் ஒன்று.

(8) பேயின் செயல்கள் இவையென்று பயங்கொண்ட அரசன், தங்களுக்கு நல்ல காவல்தெய்வங்களை அளிக்கும்படி கடவுளை வேண்டிக்கொள்கின்றான்.

(9) பொம்மலாட்டம் - பாவைக்கூத்து. பேச்சின்றி நடிப்பதால் பொம்மலாட்டம் என்கின்றான். எனினும், பாவைகளன்றி உயிருள்ளவைகளே நடிப்பதால், இதனை உயிருள்ள பொம்மலாட்டம் என்கின்றான்.

(10) யூனிகார்ன், என்பது மேனாட்டுக் காவியங்களில் காணப்படும் ஒரு கற்பிதமான மிருகம். குதிரையின் உடலும், மானின் கால்களும், சிங்கத்தின் வாலும், நெற்றியில் ஒரு கொம்பும் உடைய விலங்கென்று இது கருதப்படுகின்றது.

(11) பீனிக்ஸ் என்பதும் ஒரு கற்பிதமான பறவை. இந்தக் கற்பனையின்படி, ஒருகாலத்தில் ஒரு பறவைதான் உயிரோடிருக்குமாம், அது ஒருவித மரத்தில் உட்காருமாம், அம் மரத்திற்கு பீனிக்ஸின் சிம்மாதனம் என்பது பெயராம்; அந்த மரமும் ஒருகாலத்தில் ஒன்றுதான் இருக்குமாம். அம்மரம் வாடிப் பட்டுப்போனால் அப்பறவையும் அதனோடு செத்து, பிறகு அம்மரம் துளிர்க்குமானால் அப்பறவையும் தானே உயிர்பெற்றுவிடுமாம்.

இந்தக் காட்சியைக் கண்ட ஸபஸ்ட்டியன் இனி, யூனிக்காரன் பீனிக்ஸ் முதலியவைகளைக் கட்டுக்கதைகள் என்று எண்ணாமல் உண்மை என்றே நம்பலாம் என்கின்றான்.

(12) ஸபஸ்ட்டியனுக்குப் பின்பாட்டுப் பாடுவதே அன்டோனியோவின் தொழில். நம்பத்தகாத எதையும் தான் இனி உண்மையேயென்று ஆணையிட ஆயத்தமாயிருக்கின்றானென்று, ஸபஸ்ட்டியனையும் விஞ்சுகின்றான்.

(13) ஷேக்ஸ்ப்பியர்காலத்தில் உலகயாத்திரை போய் வந்தவர்களும், பல இடங்களைக் கண்டு திரும்பிய கப்பல் மாலுமிகளும், அயல்நாட்டில் தாம் கண்ட அதிசயங்களென்று நம்பத்தகாதன பல சொல்பவராயினர். பிரயாண வசதிகள் மிகக்குறைந்த அக்காலத்தில் பிராயணம் செய்பவர் மிகச் சிலரேயாதலின், இவர் சொல்வது மெய்யோ பொய்யோ என்று சோதிக்க எளிதில் இயல்வதில்லை. ஆதலால், பிரயாணிகளும் உண்மையல்லாதனவற்றையும் உண்மைபோல் சொல்லுந் துணிவுகொண்டனர். ஜனங்களும் பிரயாணிகள் சொல்வதைச் சந்தேகிக்கத் தலைப்பட்டு, பெரியபொய் எதனையும், "பிரயாணிகளின் கட்டுக்கதை" என்று குறிப்பது வழக்காயிற்று. "ஒரு முறையொருவன் யாத்திரைசெய்து மீண்டால் பிறகு ஆயுள்நாளளவும் பொய்சொல்லித் திரிகின்ற உரிமை அவனுக்கு வந்துவிடுகின்றது" என்று அக்காலத்து நூலொன்று பரிகசமாகக் கூறும்.

"இங்கு நிகழ்கின்ற செய்திகளைக் காண்கின்ற நாம் இனி ஒருபோதும் பிரயாணிகளைப் பொய்யரென்று பழிக்கலாகாது" என்னும் இவ் வன்டோனியோவின் வாய்கொண்டு ஷேக்ஸ்ப்பியர் பிரயாணிகளின்பொருட்டுப் பரிந்துபேசுகின்றாரோ, அல்லது அவர்களைப் பின்னும் பரிகசிக்கின்றாரோ—தெரியவில்லை.

(14) சொன்னால்-என்று துவக்கிய கன்ஸாலோ, உருவங்களைப்பற்றி அவன் விரித்துரைக்கப் புகுந்த ஆர்வத்தினிடையே, அந்த வினையெச்சத்தை முடிக்க மறந்துவிட்டான். கன்ஸாலோ கண்ட வுருவங்களை அந்தத் தீவில் வசிக்கும் ஜனங்களென மதித்து, வடிவம் விபரிதமாயிருப்பினும், மென்மையும் அன்பும் பொருந்திய தன்மையில் அவை மனிதரையும்விஞ்சியன-என்று பாராட்டுகின்றான்.

(15) சிலர்—அன்டோனியோவும், ஸபஸ்ட்டியனும், ஒருவாறு அலான்ஸோவும், இக் குறிப்பில் அடங்குவார்.

(16) போகுங்காற் புகழ்—என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. விருந்தாகச் சென்றவுடன் உன்னை அழைத்தவனைப் புகழப்புகாமல், விருந்து முடிந்து நீ திரும்புகின்றவரையில் ஒன்றும் உன் மனம் நோகும்படி நிகழாமலிருந்தால் திரும்பும்போது அவனைப் புகழ்ந்துவிட்டுப் விடைகொள். வந்தவுடன் அவனைப்புகழ்ந்துவிட்டாயானால்பிறகு நீபோவதற்குள் அப்புகழை மாற்றிப் பழிக்கவேண்டும்படி ஏதாவது நேரினும் நேரலாம்—என்பது இப்பழமொழியின் கருத்து. அவ்வுருவங்களை பாராட்டி அலான்ஸோ வியப்பது இதற்குள் கூடாதென்கின்றான்—ஏனெனில், சிறிது நேரத்தில், விருந்தெல்லாம் மறைவதும், ஏரியல் வந்து அலான்ஸோவை இடித்துரைப்பதும் நேரப்போகின்றன.

ப்ராஸ்ப்பீரோ:—(ஒரு புறமாய்) போகுங்காற் புகழ்! (16).

ப்ரான்ஸிஸ்க்கோ:—விந்தையுற மறைந்தனவே அவை.

ஸபஸ்ட்டியன்:—அதனால் என்! உணவுகளைப் பின்னே வைத்துவிட்டுச் சென்றன; நமக்கு வயிறுகளும் உண்டு. இங்கிருப்பதைச் சுவைத்திடத் தயைபுரிவாயோ!

அலான்ஸோ:—நான் மாட்டேன்.

கன்ஸாலோ:—ஏன் ஐய, நீ அஞ்ச வேண்டா. நாம் பிள்ளைகளா யிருந்தபோது, எருதுகள் அன்ன அலைதாடியோடு, மாமிசப் பையைப்போல் தொண்டை தொங்கும் மலைவாசிகள் இருந்தாரென்றேனும், அல்லது மார்பிலே தலைகள் நின்ற மனிதர்களிருந்தாரென்றேனும் எவர் நம்பியிருப்பார்? இப்பொழுதோ ஐந்துக் கொன்று போட்டுவைக்கும் ஒவ்வொருவனும் அவைகளுக்குத் தக்க ஆதாரங்கள் கொண்டுவருகின்றான் (17).

அலான்ஸோ:—அப்படியே, இதுவே என் கடைசியுண்டியாயினும் உண்பேன். சிறந்தது கழிந்துவிட்டது என்று உணர்கின்றேனாதலின் எது நேரினும் இனிப் பொருளில்லை (18). சகோதர, பிரபுவே, மன்னவா, அப்படியே நாம் செய்வதுபோல் செய்யுங்கள் (19).

(17) இது என்ன மாயமோ என்று அஞ்சாமல் உண்ணலாம். முன்னே நாம் நம்பாதன பலப் பல இப்பொழுது யாத்திரை சென்று வருபவர்களால் உண்மையாக்கப்படுவதுபோல் இவ்விருந்தும் இதனைக் கொண்டுவந்த உருவங்களும் உண்மையா யிருக்கலாம்—என்பது பொருள்.

ஐந்துக்கொன்று போட்டுவைப்பவன்-என்பது சுற்றுப் பிரயாணம் செய்பவன்என்று பொருள்படும். தூரதேச யாத்திரைக்குப் புறப்படுமுன் ஒருவன், ஒரு முதலாளியிடம் சென்று பணம் கொடுத்துவைப்பதும், யாத்திரிகன் வழியில் இறந்துவிட்டால் அந்தப் பணம் முழுவதும் முதலாளியைச் சேர்ந்துவிடுவதும், உயிருடன் திரும்பி வருவானானால் முதலாளி அவனுக்கு ஐந்துபங்கு சேர்த்துக் கொடுப்பதும், அக்காலத்து எதிர்நிலை 'இன்ஷுயரன்ஸ்' ஏற்பாடு. ஆகையால் "ஐந்துக்கு ஒன்று கொடுத்துவைப்பவன்" என்னும் தொடர் சுற்றுப் பிரயாணம் செய்பவனைக் குறிப்பதாகின்றது.

(18) சிறந்தது கழிந்தது - மகனை இழந்தது. மைந்தனை இழந்தபின் எனக்கு எது நேர்ந்தால்தான் என்ன, ஆகையால் அஞ்சாமல் உண்பேன்—என்பது பொருள்.

(19) மன்னவா - என்றது அன்டோனியோவை. இப்பொழுது அவன் மிலானுக்குத் தலைவன்.

தமிழ்ப்பாடம் 83.

அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை

[601-வது பக்கத் தொடர்ச்சி]

பேய்க்குமொரு பேய்போன்று பித்தாய்த் திரிவோர் [க்கும்
வேய்க்குமணி முத்திவரும் வேங்கடமே—வாய்க்க [முதூர்
வண்மைப்பேராயிரந்தான் மன்னினன்மாவலிபாற்
றண்மைப்பே ராயிரந்தான் சார்பு. 18

பதப்பிரிவு:—பேய்க்கு ஒரு பேய் போன்று பித்து ஆய் திரிவோர்க்கும் வேய்க்கும் அணி முத்தி வரும்—மணி முத்து இவரும்—வேங்கடமே வாய்க்கு அமுது ஊர் வண்மை பேர் ஆயிரம் தான் மன்னினன் மாவலி பால் தண்மை பேர் ஆய் இரந்தான் சார்பு.

பதவுரை.

பேய்க்கும் - பேய்களுக்கும்
ஒரு - ஒரு
பேய் - பேயை
போன்று - போலத் தோன்றும்படி
பித்து - பைத்தியம்
ஆய் - ஆகி
திரிவோர்க்கும் - (பக்தியினால் உலகப்பற்றையெல்லாம்விட்டு) திரிகின்றவர்களுக்கும்
அணி - அழகிய
முத்தி - மோக்ஷமானது
வரும் - வருவதற்கு இடமானதும்;
வேய்க்கும் - மூங்கில்களிலும்
மணி - அழகிய
முத்து - முத்துக்கள்
இவரும் - அடர்ந்திருக்கும்படியானதும் ஆன
வேங்கடமே - வேங்கடமலைதான்,
வாய்க்கு-உரைப்போர் தம்வாயினில், அமுதம்-அமுதம்போன்ற இனிமை, ஊர் - தவழ்கின்ற, வண்மை-வளப்பம்பொருந்திய, ஆயிரம் - ஆயிரம், பேர் - திருநாமங்கள், மன்னினன்-பொருந்தினவனும்; மாவலி பால்-மகாபலி சக்கரவர்த்தியினிடத்தில், தண்மை - உருவம் குறைந்த, பேர் ஆய் - வாமநன் என்ற பேரை உடையவனாய், இரந்தான் - யாசித்தவனுமான திருமால், சார்பு - சார்ந்திருக்கும் இடம்.

விரிவுரை:—பக்திப் பரவசமாகிப் பித்தனைப்போல் திரிகின்ற ஒருவன் தோற்றத்தைக் கண்ட பேய்களும் அவனைப் பேயே என்று எண்ணும் என்பது முதலடியின் கருத்து. பேயும் என்பதிலுள்ள உம் என்னும் இடைச்சொல் இழிவுசிறப்புப் பொருளுடையது. திரிவோர்க்கும், வேய்க்கும், என்பதிலுள்ள உம்மைகள் எண்ணுப் பொருளன. இந்தப் பாட்டில் அமைந்த சிலேடை பிரிமொழிச் சிலேடை.

வாழ்க்கைமனை நீத்தவரும் வாளரியும் மாதங்க
வேட்கை மறந்திகழும் வேங்கடமே—தோட்கைவிழ
மாகவந்த னைக்கழித்தார் வாழிலங்கைப் பாதகரை
லோகவந்த னைக்கழித்தா ரூர். 19.

பதப்பிரிவு:—வாழ்க்கை மனை நீத்தவரும் வாள் அரியும் மாது அங்கம் வேள் கைமறந்து இகழும்—மாதங்கம் வேட்கை மறம் திகழும்—வேங்கடமே தோள்கை விழ மா கவந்தனை கழித்தார் வாழ் இலங்கை பாதகரை லோகம் வந்தனைக்கு அழித்தார் ஊர்.

பதவுரை

மனை வாழ்க்கை - இல்லற வாழ்வை

நீத்தவரும் - விட்டவரும்
மாது - மாதர்களுடைய
அங்கம் - சரீரத்தினது
வேள் - விருப்பத்தை
கைமறந்து - முற்றிலும் மறந்து
இகழும் - அதனை இகழ்வதற்கிடமானதும்;
வாள் - கொடிய
அரியும் - சிங்கமும்
மாதங்கம் - யானையை எதிர்க்க வேண்டுமென்ற
வேட்கை - ஆவலுடன்
மறம் - வீரம்
திகழும் - விளங்குவதற்குமிடமானதும் ஆன
வேங்கடமே - வேங்கடமலைதான்,

தோள் - தோளிலிருந்து, கை - கைகள், விழ - விழும்படி, மா - பெரிய, கவந்தனை - கவந்தன் என்னும் அரக்கனை, கழித்தார் - அறுத்தவரும்; இலங்கை - இலங்கையில், வாழ் - வாழ்ந்த, பாதகரை - பாதகர்களை, லோகம் - உலகத்தின், வந்தனைக்கு - நன்றியைப் பெறும்படி, அழித்தார் - அழித்தவருமாகிய திருமால் விரும்பி இருக்கும், ஊர் - ஊராகும்.

விரிவுரை:—கைம்மிகல் கைகூடல் என்ற இடங்களில்போல், கைமறந்து என்ற இடத்திலும் கை என்பது மிகுதிப்பொருளை உணர்த்திநின்றது. 'மாதங்க வேட்கைமறந்திகழும்' என்னும்தொடரை 'மாது அங்கம்வேள்கைமறந்துஇகழும்' எனப்பிரித்து மனைவாழ்க்கை விட்டவர்களை ஒட்டிப் பொருள் சொன்னோம். மீண்டும் அதனையே, 'மா தங்கம் வேட்கை மறந்து இகழும்' எனப் பிரித்துச் 'சிறந்த பொன் ஆசையை மறந்து இகழ்கின்ற நீத்தார்' என்றும் கொள்ளலாம். சிங்கத்தையொட்டிப் பொருள்சொல்லும்போது, மாதங்கம் என்பது ஒரு சொல்லாய் யானையைக்குறிக்கும். முன், மறந்து இகழும் என்று பிரித்ததற்குப் பதிலாய் இப்பொழுது மறம்திகழும் எனப்பிரித்து வீரம் விளங்குகின்ற என்று பொருள்கொள்ளவேண்டும்.

வாழரியுஞ் சந்தனந்தோய் மாருதமுந் தாக்குதலால்
வேழ மருப்புகுதும் வேங்கடமே—நீழலமர்
பஞ்சவடி காட்டினன் பாரளப்பான் போலெவர்க்குங் 20
கஞ்சவடி காட்டினன் காப்பு.

பதப்பிரிவு:—வாழ் அரியும் சந்தனம் தோய்மாருதமும் தாக்குதலால் வேழம் மருப்பு உகுதும்—மருபுகுதும்—வேங்கடமே நீழல் அமர் பஞ்சவடி காட்டினன் பார் அளப்பான்போல் எவர்க்கும் கஞ்சம் அடி காட்டினன் காப்பு.

பதவுரை.

வாழ் - அங்கு வாழ்கின்ற
அரி - சிங்கங்கள்
தாக்குதலால் - எதிர்ப்பதினால்
வேழம் - யானைகளது
மருப்பு - தந்தங்கள்
உகுதும் - சிந்துவதற்கு இடமானதும்;
சந்தனம் - சந்தனமரத்தில்
தோய் - பட்ட
மாருதம் - காற்றானது
தாக்குதலால் - தன்மேல் வந்து படுவதால்
வேழம் - மூங்கில்கள்
மரு - வாசனையை
புகுதும் - அடைவதற்கு இடமானதும் ஆய
வேங்கடமே - வேங்கடமலைதான்.

நீழல் - நிழலானது, அமர் - பொருந்திய, பஞ்சவடி - பஞ்சவடி என்னும், காட்டினன் - வனத்தில் தங்கியவனும், பார் - பூமியை, அளப்பான்போல் - அளப்பவனைப்போல், எவர்க்கும் - எவ்வுலகத்திலிருப்பவர்க்கும், கஞ்சம் - தனது தாமரைமலர்போன்ற, அடி - பாதத்தை, காட்டினன் - காட்டியருளியவனுமாகிய, திருமால், காப்பு - காக்கின்ற இடம்.

விரிவுரை:-வேழம் என்னுஞ்சொல் யானை மூங்கில் என்ற இரண்டு அர்த்தத்திலும் முன்னரே வந்திருக்கின்றது. உகுதும் புகுதும் என்றவற்றிலுள்ள, து என்னும் எழுத்து சாரியை; உகும், புகும் என்று அவை சாரியை இன்றி நிற்கும்.

மாவலியினிடத்தில் பூமியை அளந்து எடுத்துக்கொள்ள நினைத்தவன்போல் தோன்றினும் வாஸ்தவத்தில் திருமாலின் நோக்கம் உலகத்தை அளக்க வேண்டுமென்பது அன்று எனவும், அவ்வாறு அளப்பதை ஒரு நிபமாகவைத்து எல்லா லோகங்களிலிருப்பவரும் தனது தாமரைமலர் போன்ற உள்ளடியின் பெருமையைக்கண்டு உய்யுமாறு அருள்வதே அவன் கருத்து எனவும் கவி மிகவும் சாதுர்யமாகக் கூறுகின்றார். திருமால் தனது திருப்பாதத்தை உயர்த்தியது உலகங்களை அளப்பதற்காகவே செய்த காரியம் என்பது பிரசித்தம். அவ்வாறிருக்கக் கவி அதனை மறுத்துத் திருமால்பாதத்தைத்தூக்கியது அவர் தன்னுடைய தாமரைபோன்ற உள்ளடியை யாவரும் காணும் பொருட்டே என்று கூறுகின்றார். இப்படி, உண்மையாயிருக்கும் செய்தியொன்றை மறுத்து வேறொன்றாகக் கூறுவதை அவனுதி அணி என்பர். இதனிற்குத் தமிழில் ஒழிப்பணி என்பது பெயர். வேறொரு தன்மையைப் புதியதாய்க் கவிதன்னுடையசாமர்த்தியத்தினால் ஏற்றிவைக்கும்பொருட்டு அதன் இயற்கையாய தன்மையை முதலில் ஒழித்துவிட வேண்டியிருந்ததலால் இவ்வணிக்கு ஒழிப்பணி என்னும் பெயர் வந்தது. திருமால் மாவலிபால் பெற்ற மண்ணை அளந்துகொள்வதற்குப் பாதத்தை உயர்த்தினர். இதுதான் அச்செய்கையின் இயற்கையான தன்மையாம், உண்மையுமாம். ஆயினும், "பார் அளப்பான் போல்" என்ற வாசகத்தால், அவ்வுண்மை ஒழிக்கப்பட்டது. "பாரளக்க என்பது பாவனையே, நிசமோ வேறு" என்னுங் குறிப்புப் 'போல்' என்னுமச் சொல்லில் அடங்கியிருப்பதை எளிதில் உணரலாம். இவ்விதம் உண்மையான தன்மையை ஒழித்தது எதற்காகவெனின், பாதத்தைத் தூக்கியதற்கு வேறுபொருள் கற்பிக்கும் பொருட்டேயாம். தன் கஞ்சம்போன்ற அடியை யாவருங் காண்பதற்காகப் பாதத்தைத் திருமால் நிமிர்த்தி அருளினன் என்பதுதான் அவ்வாறு வேருகக் கற்பிக்கப்பட்ட பொருள் ஆகும். தமயந்தி நக்ஷத்திரங்களை நக்ஷத்திரங்களல்லவென்று மறுத்து ஒழித்து, அவை ஆகாயம் கொண்ட கொப்புளங்கள் என்றதும், இவ்வணிக்கு உதாரணம்.

இலக்கணம்

நிலைமொழி யிறுதியில் மகரமெய்யும் வருமொழி முதலில் உயிரும் இருக்குமானல் அவை எவ்வாறு புணரும் என்பதை இனிக் கற்கவேண்டும்.

இன்றைய பாடத்தின் ஈற்றுச்செய்யுளில் ஈற்றடியில் கஞ்சவடி, என வந்திருக்கின்றது. அதனைப் பிரித்தால் கஞ்சம் + அடி, என நிற்கும். இவ்விரு சொற்களும் சேரும்போது, நிலைமொழியின் ஈற்றில் மெய்யும் வருமொழி முதலில் உயிரும் வந்தால் அம்மெய்யின்மேல் இவ்வுயிர் ஏறி உயிர்மெய்யாகும் என்ற பொதுவிதியின்படி புணருமாயின் 'கஞ்சமடி, என்று ஆகவேண்டும். இவ்விடத்திலோ அவ்வாறு ஆகவில்லை. அந்த மகர மெய்யே கெட்டுப்போய்விட்டது. கஞ்சம் + அடி = கஞ்ச அடி. இது கஞ்சவடி என, அகரத்திற்குப் பதிலாய் வகரம் வந்தவிதம் வேறு. அதனைச் சிறிது பொறுத்துக் கற்போம். இப்பொழுது கஞ்சம் என்பதிலுள்ள ஈற்று மகரமெய் கெட்டது, என்பது மாத்திரம் கவனித்தால் போதும். எனினும், நிலைமொழியீற்று மகரமெய் வருமொழிமுதல் உயிருடன் புணரும்போதெல்லாம் கெட்டேவிடும் என்று எண்ணப்படாது. கஞ்சம் + அலர்ந்தது என்பது கஞ்சமலர்ந்தது, என்றுமகரமெய் கெடாமல் வருமொழிமுதல் உயிர்ஏறப்பெற்று மற்றெல்லா மெய்யீறுகளையும்போலவே புணரலாயிற்று. பின், கஞ்சம் + அடி = கஞ்ச அடி என ம் கெட்டு விகாரப்புணர்ச்சியும், கஞ்சம் + அலர்ந்தது = கஞ்சமலர்ந்தது என ம் கெடாமல் இயல்புப் புணர்ச்சியும் ஆனது ஏன் என்றால், காரணம் இருக்கின்றது. நிலைமொழிக்கும் வருமொழிக்கும் உள்ள தொடர் இலக்கணத்தைக் கவனிக்கவேண்டும். கஞ்சம் + அடி என்பது கஞ்சம்போன்ற அடி என விரியுமாகையால் உவமைத்தொகை—ஆதலால் ம், கெட்டது; கஞ்சம் + அலர்ந்தது, என்பது எழுவாய்த்தொடர்—ஆதலால் ம் கெடவில்லை.

எனின், எந்த எந்தத் தொடர்களில் நிலைமொழி ஈற்று மகரமெய் கெடாமல் இயல்பாய் வருமொழி முதல் உயிரை ஏற்று உயிர்மெய் ஆகும் என்றும், எந்த எந்தத் தொடர்களில் அது கெட்டுப்போய்விடும் என்றும், பார்ப்போம்.

சொற்றொடர்கள், தொகாநிலைத் தொடர்களென்றும் தொகைநிலைத் தொடர்களென்றும், இருவகைகளாகுமென்பது ஞாபகத்திலிருக்கலாம். எவை யெவை தொகைநிலைத் தொடர்களென்பதையும், எவை யெவை தொகாநிலைத் தொடர்களென்பதையும் முன்னரே கற்றிருக்கின்றீர். இந்தச் சந்தர்ப்பத்தில் அவைகளை மீண்டுமோர்முறை படித்துத் தெளிந்துகொள்ளுதல் நல்லது.

I தொகாநிலைத் தொடர் ஒன்றிலும் நிலைமொழி இறுதி மகரமெய் வருமொழி முதல் உயிரோடு புணரும்போது கெடாது. அந்தமகரம் இயல்பாகவே யிருந்து பொதுவிதியின்படி மற்ற மெய்யெழுத்துக்களைப் போலவே உயிரை ஏற்றுக்கொள்ளும். உதாரணம்:—

மரம் + ஆடியது = மரமாடியது-எழுவாய்த்தொடர்,
வரும் + அரசன் = வருமரசன் — பெயரெச்சத்தொடர்.
பங்கஜம் + ஓடு = பங்கஜமோடு—விளித்தொடர்.
[பங்கஜம் என்ற பேருடைய ஒருத்தியைக் கூப்பிட்டு அவளை ஓடச்சொல்லும் பொருளில் இது விளித்தொடர் ஆகும்.]
அரவம் + அரவம் = அரவமரவம்—அடுக்குத்தொடர்.
பறக்கும் + அன்றில் - பறக்குமன்றில்—வினைமுற்றுத்தொடர்.
[அன்றில்பறக்கும் என்னும்பொருளில் இது வினைமுற்றுத் தொடராம்.]
ஊரகம் + இருந்தான் = ஊரகமிருந்தான். ஏழாம் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

II தொகைநிலைத் தொடர்களில், வேற்றுமை என்றும் அல்வழியென்றும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அவைகளில்,

i. வேற்றுமைத் தொகையில், ஆறும் வேற்றுமை தவிர மற்ற உருபுகள் மாத்திரம் தொக்க தொடர்களில் ம் கெடாது. உதாரணம்:—

நிலம் + உழுதான் = நிலமுழுதான்—இது, நிலத்தை உழுதான் என விரியுமாகையால், இரண்டாம்வேற்றுமைத் தொகை
சூலம் + எய்தபுண் = சூலமெய்தபுண்—(சூலத்தால் எய்த புண்) மூன்றும் வேற்றுமைத் தொகை.
சுந்திரம் + அண்ணன் = சுந்திரமண்ணன் [சுந்திரம் என்பவனுக்கு அண்ணன், என்றபொருளில்இது நான்காம்வேற்றுமைத் தொகை ஆகும்.]
மரம் + இறங்கினன் = மரமிறங்கினன் (மரத்திலிருந்து இறங்கினன்)—ஐந்தாம் வேற்றுமைத் தொகை.
குளம் + ஆடினன் = குளமாடினன் (குளத்தில் ஆடினன்) ஏழாம் வேற்றுமைத் தொகை.

ii. அல்வழியில், பண்புத்தொகையும் உவமைத்தொகையும் தவிர மற்றத்தொகைநிலைத்தொடர்களில் ம் கெடாது.

உதாரணம்:—

கலம் + ஆழாக்கு = கலமாழாக்கு (கலமும் ஆழாக்கும்)—உம்மைத்தொகை.

காலம் மறைந்துநிற்கும் பெயரெச்சம்ஒன்றும்மகரமெய்யை ஈற்றிலுடையதா யிருக்க இயலாதாகையால் வினைத்தொகைக்கு உதாரணம் இங்குக் காட்ட முடியாது. அப்படியே மற்றத் தொகைகளுக்குப் புறத்தே பிறப்பது அன்மொழித்தொகையாகையால் அதற்கும் இங்கு உதாரணம் காட்ட இயலாது.

எமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

அப்பர்

அப்பரும் அறுபத்தினன்கு கலைகளும்—30. வியாகரணம்

[606-வது பக்கத் தொடர்ச்சி]

(c) அப்பர் தேவார உரிச்சொற்களும், அவற்றின் வினைச் சம்பந்தமும்

உரிச் சொல்லாவது யாது என்பதை அறிய நன்னூலை நோக்குவோமாயின் உரியியல் முதற் சூத்திரம் பின்வருமாறு காணப்படும்:—

பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்

இந்தச் சூத்திரம் முற்றும் ஒரு குற்றத்தை அடிப்படையாக கொண்டு, உரிச்சொல்லைப் பண்புச் சொல்லாக்கி, பிறகு, பண்புச் சொல்லை அதனின்று நீக்கும் பொருட்டு, பண்புச்சொற்கள் உயிரில்லாத வற்றிற்கு ஏற்றனவென்றும், உரி உயிருள்ள பொருளுக்கு உரியதென்றும் கூறி, தொல்காப்பியனார் பொருளதிகார இறுதியில் கூறிய உயிர்ப்பேதங்களை உரியியலில் அடக்கி, உயிர்ப்பண்புடன் பொதுப்பண்பாகிய தொழிற்பண்பு கூறி உரியியலுக்கு யாதொரு சம்பந்தமில்லாத சூத்திரங்களையும் கலந்து நன்னூல்வகுத்தது வேடிக்கையாம். தொல்காப்பியத்தில் உள்ள உரியியலையும், நன்னூல் உரியியலையும் ஒன்றின் எதிரில் மற்றொன்று வைத்து மாணவர்கள் காண்பாராயின் பவணந்தியின் பிழைகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளங்கும். இவை பல உள. அவற்றுள் இங்குச் சிலவற்றைக் கருதுவோம்.

ஆசிரியர் தொல்காப்பியனார் பின்வருமாறு உரிச்சொல்லுக்கு விதி கூறுகின்றார்:—

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
யிசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடு மாறி
யொருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கி
னெச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்
—தொல்—உரியியல்—1.

இதற்குச் சேனாவரையர் பின்வருமாறு உரைவரைந்திருக்கின்றார்:—“உரிச்சொல்லை விரித்துரைக்கு மிடத்து, இசை குறிப்புப் பண்பென்னும் பொருண்மேற்றோன்றி, பெயர்க்கண்ணும், வினைக்கண்ணுந் தம்முருபு தடுமாறி, ஒருசொற் பலபொருட் குரித்தாய்வரினும், பலசொல் ஒருபொருட் குரித்தாய் வரினும் கேட்டானால் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக்கு உரிய நிலைக்களத்தின்கண் யாதானுமொரு சொல்லாயினும்வேறு வேறு பொருளுணர்த்தப்படும் என்றவாறு” ......

“இசை குறிப்பு பண்பு என்னும் பொருளவாய்ப் பெயர் வினை போன்றும், அவற்றிற்கு முதனிலையாயும் தடுமாறி, ஒருசொல் ஒருபொருட் குரித்தாதலேயன்றி, ஒருசொல் பல பொருட்கும், பலசொல் ஒரு பொருட்கும் உரியவாய் வருவன உரிச்சொல்லென்றும், அவை பெயரும் வினையும் போல ஈறுபற்றிப் பொருளுணர்த்த லாகாமையின், வெளிப்படாதவற்றை வெளிப்பட்டவற்றோடு சார்த்தித் தம்மையெடுத்தோதியே அப்பொருள் உணர்த்தப்படும் என்றும், உரிச்சொற்குப் பொதுவிலக்கணமும் அவற்றிற்குப் பொருளுணர்த்து முறைமையு முணர்த்தியவாறு.”

“குறிப்பு, மனத்தாற்குறித்து உணரப்படுவது; பண்பு, என்பது பொறியால் உணரப்படுங் குணம்.”

இவற்றைப் பவணந்தி கவனியாமலே, சூத்திரங்கள் வரைந்துள்ளார்.

கறுப்பு தவ என்பன பெயர் வினைப் போலியாம் என்பர். “கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள*” (தொல்-உரியியல் 76) என்றார். திருநாவுக்கரசு நாயனார் பாடிய தேவாரம் உரிச்சொற்கள் நிறைந்த திருமுறைகளாதலாலே, திருஞான சம்பந்தரைப் போல ஒரு சொல் ஒரு பொருளன்றி வேறுபொருள் உணர்த்தல் ஆகாதெனும் கருத்தை வைத்துப் அப்பர் பாடியதாகக் காணப்படவில்லை. இவரது தேவாரம் உரிச்சொன்மயமா யிருப்பதால், பொருள் எளிதென்று எண்ணும் இடங்களெல்லாம் காணக் கூடாத ஆழம் வாய்ந்த கருத்துக்கள் அமையப் பெற்றுள்ளன. கறுப்பும் சிவப்பும் வெகுளிக்குறிப் புணர்த்துவது, பின்வரும் அப்பர் பாசுரத்திற் காணலாம்.

கறுத்தவன் கண்சிவந்து கயிலைநன்
மலையைக் கையால்
மறித்தலும் மங்கை யஞ்ச
வானவ ரிறைவன் நக்கு
நெறித்தொரு விரலா லூன்ற
நெடுவரை போல வீழ்ந்தான்
மறித்திறை யூன்றி னானேல்
மறித்துநோக் கில்லை யன்றே

[திருக்கைலாயம் - திருநேரிசை 8.

இவ்வாறு தொல்காப்பியனார் எடுத்துக்காட்டிய பல உரிச்சொற்கள் அப்பர்தேவாரத்தில் ஆங்காங்கு வருகின்றன. அவ்வாசிரியர் கூறியவாறு,

மெய்பெறக் கிளந்த யுரிச்சொல் லெல்லா
முன்னும் பின்னும் வருபவை நாடி
யொத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்தல்
தத்த மரபிற் றோன்று மன்பொருளே

என்னல் வேண்டும்.

[தொல் - உரியியல் 98.]

மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றாத திருநாவுக்கரசின் பொருட்தன்மையை உணரவேண்டுமாயின்,

“அன்ன பிறவும் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉ
முரிச்சொல் லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னினைத்தென வறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்தல்”

கூடுமன்றோ?

* “நிறத்துரு வுணர்த்தற்கு முரிய வென்ப”
—தொல் - உரியியல் 77.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[606-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து, 7-ம் தசகம்

6-ம் பாசுரம்

ஏனமாய் நிலங்கீண்டவென் னப்பனே
கண்ணா வென்றுமென்னை யாளுடை
வான நாயகனே மணிமாணிக்கச் சுடரே [பூவுறை
தேனமாம்பொழில்தண்சிரீ வரமங்கலத்தவர்கைதொ
வானமா மலையே யடியேன் தொழவந் தருளே.

குறிப்பு:—நம்ஆழ்வார்போன்ற பக்தர்கள் தொழுவதற்கே பகவான் சிரீவரமங்கலநகரில் எழுந்தருளியிருக்க, இவர் இப்பொழுது, “அடியேன் தொழவந் தருளே” என்று அவரைக் கூவுதல் அமையுமா? அதுவும், வைகுண்டத்தில் நித்தியஸூரிகள் சேவிக்கின்ற பிரபுவே (வான நாயகனே) என்றும், வைகுண்டத்தில் பெரிய குன்றம்போல் இருப்பவனே (வானமா மலையே) என்றும் அழைக்கின்றாரே? மேலும், அர்ச்சாவதாரம் தாம் தொழுவதற்கு அமையாது என்று சென்ற பாசுரத்தில் சொன்னவர், இப்பாசுரத்தில் தொழுவதன்பொருட்டு அப்பகவானைக்கூவலாமோ? என்ற சந்தேகங்களுக்கு—முன்பாசுரத்தில் சொன்னவைகளையே ஹேதுக்கள் காட்டி மீண்டும் இப்பாசுரத்தில் நிரூபிக்கின்றார். ஆகையால் அவைகள் பொருந்தும் என்னப் பரிஹாரம் கண்டுகொள்ள வேண்டும். நித்தியஸூரிகள்செய்யும் எல்லாவிதமான கைங்கரியங்களையும் தம்மிடத்தில் பெற்றுக்கொள்வதற்கானால் எம்பெருமானை வரும்படி கூப்பிடுவது உசிதமாயிருக்கலாம், பொருந்தவும் பொருந்தலாம். தொழுவதற்கு மட்டுமே கூப்பிடுவதானால் மேற்சொன்ன நிர்வாஹமே ஸமயோசிதம்.

கருத்து:—அடியேன் தொழ வந்து அருளுவதே நீர் இப்பொழுது செய்யவேண்டியது. ஒரு காரணமும் முகாந்திரமுமில்லாமல் நான் ஏன் இதற்கு வரவேண்டும், என்பீரானால் — ஸாகரத்தில் முழுகிப்போன ஜகத்தை எடுத்தது என்னகாரணம்பற்றி நடத்தினீர்? உமது தயை அன்றோ காரணம்; இன்னமும் அப்படியே எனக்குச் செய்தருள வேண்டும்.

7-ம் பாசுரம்

வந்தருளி யென்னெஞ் சிடங்கொண்ட
வானவர் கொழுந்தே யுலகுக்கோர்
முந்தைத் தாய்தந்தையே முழுவே ழுலக முண்டாய்
செந்தொழிலவர் வேத வேள்வி யறாச்சிரீ
வரமங் கலநகர்
அந்தமில் புகழா யடியேனை யகற்றேலே.

உரை :— வந்து அருளி - நீ இருக்கும் இடம் தேடித்தேடி அடியேன் வரவேண்டியதுபோக நீயாக நான் இருக்கும் இடம் தேடிவந்து, என் நெஞ்சு இடம்கொண்ட - என் நெஞ்சை உனக்கு இருப்பிடமாகக்கொண்ட, வானவர் கொழுந்தே - நித்திய ஸூரிகளின் ஸ்வாமியே, உலகுக்கு ஓர் முந்தைத் தாய் தந்தையே - உலகங்களுக்கெல்லாம் அநாதியான தாயும் தந்தையுமாய் நின்று காப்பாற்றிவருகின்ற இரக்ஷகனே, முழு ஏழ் உலகம் உண்டாய் - எழு உலகங்கள் முழுவதையும் பிரளயகாலத்தில் வயிற்றில் வைத்து இரக்ஷித்தவனே, செம் - பிரதிப்பிரயோஜனம் கருதாத செம்மை வாய்ந்த, தொழிலவர் - கைங்கரியம் செய்கின்றவர்களது, வேதவேள்வி அறா - வேதங்களிற் சொல்லிய யாகங்கள் இடைவிடாமல் நடக்கின்ற, சிரீவரமங்கலநகர் - சிரீவரமங்கல நகரில் எழுந்தருளியிருக்கின்ற, அந்தமில் புகழாய் - எல்லையற்ற புகழை உடையவனே, அடியேனை அகற்றேல் - உன் தாஸனாகிய என்னைக் கைவிடாதே.

8-ம் பாசுரம்

அகற்றநீ வைத்த மாயவல் லைம்புலன்க
ளாமவை நன்கறிந்தனன்
அகற்றி யென்னையும் நீயரும் சேற்றில்
வீழ்த்தி கண்டாய்
பகற்கதிர் மணிமாட நீடு சிரீவர
மங்கை வாணனே யென்றும்
புகற்கரிய வெந்தாய் புள்ளின்வாய் பிளந்தோனே.

கருத்து:—ஆச்சரியமான சக்தியை உடைய ஐம்புலன்களின் நுகர்ச்சியை நான் அநுபவித்ததிலிருந்து, அவைகள், எவ்வளவு ஞானவான்களையும் உலக விஷயங்களில் அகப்படுத்தும் மஹிமை வாய்ந்தன என்பதைச் செவ்வனே தெரிந்துகொண்டேன்! ஆகையால், எனக்கு நீ கொடுத்திருக்கும் இவ் வைம்புலன்கள் நான் உன்னை விட்டுவிடச் சாதனமாயினவே தவிர வேறில்லை. கொடிய சேற்றில் நான் விழும்பொருட்டே நீ அவைகளை எனக்குப் பிரதானம்செய்தாய் என்று சொல்வது தக்கதே.

9-ம் பாசுரம்

புள்ளின்வாய் பிளந்தாய் மருதிடைப் போயின
யெருதே ழடர்த்த வென்
கள்ள மாயனே கருமாணிக்கச் சுடரே
தெள்ளி யார்திரு நான்மறை கள்வல்லார்
மலிதண் சிரீவர மங்கை
உள்ளிருந்த வெந்தா யருளா யுய்யுமா றெனக்கே.

கருத்து:—உன்னுடைய திவ்விய சேஷ்டைகளாலும் நிரவதிக ஸௌந்தரியத்தாலும் என்னைத் தோற்பித்து உனக்கு அடிமையாக்கிக்கொண்டு அருளியவனே, வேதபாரங்கதராய் உன்னுடைய திருவடிகளிலேயே ஈடுபட்ட திவ்விய ஜநங்களால் சமர்த்தியான சிரீவரமங்கையுள் கோவில்கொண்டவனே, அடியேன் உய்யும்படி கிருபை செய்தருளவேணும்.

குறிப்பு:—‘என்னை அகற்றினாய்’ என்று சென்ற பாசுரத்தில் பகவானிடத்தில் முறையிட்டவர், இப்பாசுரத்தில், ‘உய்யுமாறு அருளாய்’ என்று எப்படிச் சொல்லக்கூடு மென்றால்?—சிரீவர மங்கைநகர் வேதவித்துக்களான பிராமணர்களுக்கும் எனக்கும் ஆக அல்லவோ நீ அந்தத் திவ்விய தேசத்தில் கோவில் கொண்டது - என்று கேட்கின்றார் எனக் கொள்க.

10-ம் பாசுரம்

ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்
தந்தொழிந் தாயுனக் கோர்கைம்

மாறுநா ணென்றிலே னெனதாவியு முனதே
சேறுகொள் கரும்பும் பெருஞ்செந்நெலும்
மலிதண் சிரீவர மங்கை
நாறுபூந் தண்டுழாய் முடியாய தெய்வநா யகனே.

குறிப்பு:—இந்தப்பாசுரத்தில், பகவானை அடைந்த பிரஸ்தாபம் ஒன்றும் இல்லாதிருக்க, தமக்கு ஏதோ இலாபம் கிட்டிவிட்டதுபோல் சந்தோஷப்பட்டு, எம்பெருமானுக்குக் கைம்மாறு உதவத் தம்மிடம் ஒன்றுமில்லை, என்று ஆழ்வார் எப்படிச் சொல்கின்றார் என்றால்—பகவானைக் கிட்டிக் கலவை நேராதிருந்தாலும், தமக்கு இரண்டு நற்பயன்கள்வாய்த்தது கொண்டு உபகாரசிந்தையில் தாழ்கிறார் என்று கொள்ளவேண்டும்—பகவான் பாதங்களை உய்யும் ஆறு என்றும் மற்று, அவைகளே சரண் (அதாவது அடையவேண்டும் இடம்) என்றும் ஆகிய இவ்விரண்டு துறைகளையுந் தமக்குத் தெளியவைத்த நன்மைகளுக்கு உபகார ஸ்மிருதிசெய்து சந்தோஷப்படுகிறாரென்ற சங்கதி அறியத்தக்கது.

உன்னை அடைவதற்கு உன் பாதங்களே மார்க்கம் என்றும், அப்பாதங்களே அடையவேண்டிய இடமும் ஆம் என்றும் நினைக்கின்ற ஸ்வபாவத்தை எனக்குத் தந்தருளினாய். இதுவே பரம உபகார மல்லவோ. இப்பெரும் உபகாரத்திற்கு உனக்கு ஓர் கைம்மாறு உதவப்பெற்றிலேன். என் ஆன்மாவும் உன்னுடையதே யாகையால் அதனைக் கைம்மாறாகக் கொடுக்க எனக்குப் பாத்தியமில்லை. மேலும், "ஸர்வ பிரகாரத்தாலும் பரிபூரணனாயிருக்கும் உனக்கு என்னால்செய்யலாவது ஒன்றுண்டோ.

'ஆறு', 'சரண்' என்ற இரண்டு பதங்களும் ஒரு பொருளைக் குறிப்பதாக உரையிடுவதை விட்டு, பூர்வ உரைகாரர்கள், 'ஆறு' என்பதற்கு உபாயம் என்றும், 'சரண்' என்பதற்குச் சேரும் இடம் என்றும் பொருள் கொண்டதை அநுசரித்திருக்கின்றோம். இதுவே உசிதம். இல்லையாகில், புனர்உத்தி என்னும் தோஷம் சம்பவிக்கும். இப்பெரியார் பாசுரங்களில் கசடுகளும் வழுக்களும்புனருத்திகளும் வேறு எவ்வித மனுஷ்ய புத்தி ஸ்வபாவத்துக்குரியதாகிய, "பிரமாதங்களும்" கண்டுபிடிக்க முடியாதென்பதை நான் உபோத்காதத்திலேயே வரைந்துள்ளோம்.

11-ம் பாசுரம்

தெய்வ நாயகன் நாராயணன்
திருவிக்கிரம னடியிணைமிசை
கொய்கொள் பூம்பொழில் சூழ்குரு
கூர்ச்சட கோபன்
செய்த வாயிரத் துள்ளிவை தண்சிரீ
வரமங்கை மேயபத்துடன்
வைகல் பாட வல்லார்
வானோர்க் காரா வமுதே.

குறிப்பு:—இங்குத் திருவிக்கிரமாவதாரத்தை எடுத்தது—பகவான், அந்த அவதாரத்தில் தன் சொத்தாகிய மூன்று உலகங்களையும் தானே அளந்து கட்டிக்கொண்டதுபோல், எல்லா ஆத்மாக்களையும் தன்னுடைய சொத்தாக நினைத்துத் தானே காத்துக்கொள்வானென்ற உட்கருத்துடன் கூறியபடி. முதல் பாசுரத்திலேயே, 'எந்தாய்' என்று ஆழ்வார் அழைத்து, 'உன் மக்களில் ஒருவனாகிய என்னை நீ விட்டொழிந்தால் அதன் நஷ்டம் உன்னுடையதே' என்று எச்சரிக்கை செய்திருப்பதை இது ஞாபகப்படுத்துகிறது.

கருத்து:—ஸர்வேச்வரத்தை நிதர்சனமாகக் காட்டின திருவிக்கிரமனான நாராயணன் திருவடிகளின் மேல், கொய்கொள் பூம்பொழில் குருகூர்ச் சடகோபன் செய்த ஆயிரத்துள், சிரீவரமங்கை நகரை ஸ்துதி செய்த இப்பத்தை எப்பொழுது பாடினாலும், அப்படிப் பாடுகிறவர் எக்காலத்திலும் வானோர்க்கு ஆராத அமுதம் ஆவார்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[4-வது வால்யூம், 625-வது பக்கத் தொடர்ச்சி]

குறிப்பு (Meaning)

"மா கொண்டு வா" என்று ஒருவன் கட்டளையிடுவானானால், "மா" என்று சொன்னதின் பொருள் என்ன? மாம்பழமா? குதிரையா? சொல்வோனுடைய குறிப்பு என்ன? "மா" என்பது எதனைச் சுட்டுகின்றது?—இவ்வாறு ஆராய்ச்சி செய்கின்றோமல்லவா? அஃதே போலச் சிவப்புநிற உருண்டைப் பிழம்பொன்று புலனானபோது, "அஃது எதனை உணர்த்துகின்றது? எதைச் சுட்டுகின்றது? அதன் குறிப்பு என்ன?" என்றும் ஆராய்ச்சி செய்யலாம் அல்லவா? சுட்டு, பொருள், என்று மேலே நாம் பயன்படுத்திய சொற்கள் வேறு பல பொருள்களிலும் பயின்று வருவதால், அவற்றை யொழித்து, மிகுதிநின்ற குறிப்பு என்ற சொல்லை நாம் கைக்கொள்வதே தகுதியுடையதாகும்.

இக் குறிப்பு என்பது யாது? வீட்டினுள்ளேயிருந்து இதனை எழுதிக்கொண்டிருக்கும் எனக்குத் தொலைவிலிருந்து ஒரு நாய் குரைப்பது கேட்கிறது. அப்போது அவ்வொலி மட்டுமே புலனாகிறது. அந்நாயின் வடிவத்தையோ நிறத்தையோ நான் காணவில்லை. ஒலிப்புலன் ஒன்றுதான் காட்சிப்புலனாகிறது. அந்த நாயின் வடிவம் முதலியன கருத்துப்புலனாய் எழுகின்றன. அதனால் நாய் என்று உணர்கின்றேன். [கண்ணிற்குத் தோன்றும் ஒளிப்புலனைக் கட்புலன் என்போம். ப்ரத்யக்ஷ ப்ரமாணம் என்னும் காட்சியளவையால் கண் வழியாகவும் செவி வழியாகவும் மூக்கு வழியாகவும் நாக்கு வழியாகவும் தோல்வழியாகவும் நேரே நாம் அறிவனவற்றைக் காட்சிப்புலன் என்போம். நேரே பொருள் இல்லாதபோது நமது நினைவில் இப்புலன்கள் தோன்றுமானால், இவற்றைக் கருத்துப்புலன்கள் என்போம்] ஆகவே நான் கேட்ட குரையொலியால் எழுந்த நாயின் உணர்வு, காட்சிப் புலனாகிய ஒலிப்புலனோடு கருத்துப்புலனாகிய நிறம் முதலிய மற்றப்புலன்களும் சேர்ந்து இயைந்து எழுந்ததேயாகும். இஃது ஒருசாரார் கொள்கை. அவர்கள், புலன்களே நம்முடைய மனநிலையனைத்திற்கும் அடிப்படையாம் என்பர். அவற்றின் கூட்டுறவே

நம்முடைய மனமாகும் என்று மன்றாடும் புலக்கோள்கையினர் எனப்படுவோர் இவர்களே.

"எண்ணம் என்றும் குறிப்பு என்றும் கூறுவன எல்லாம் மற்றைய உயிர்களைவிடச் சிறந்த மனம் தமக்கிருப்பதாக மனப்பால் குடிப்பவர்கள் காணும் பகற்கனவே யாகும். இவை மாப்பிள்ளைத் தோழனைப்போலப் பொருளின்றி முடிவனவாகும்; இவற்றைத் தேடித் திரிந்து ஆராய்ச்சி செய்வதைவிட முயற்கொம்பைக் காய்ச்சிப் பொன்னெடுக்கலாம். 'மா' என்ற சொல்லோ மஞ்சட்பிழம்போ புலனானபொழுது நாவில் நீரூறுகிறது. இவ்வாறு நரம்புக் கிளர்ச்சிகள் உடம்பிற் பாய்ந்து நம்மை இயக்கிவைப்பதனையே "குறிப்பு" என்று கூறித் தம்மையும் பிறரையும் மயக்கி வருகின்றார்கள். 'புலி' வடிவம் புலனாகிறபோது ஓடத் தூண்டும் நரம்புக் கிளர்ச்சிகள் உடம்பில் வேண்டிய இடங்களில் எல்லாம் பாய்கின்றன. அவ்வளவே அக்காட்சிப் புலனின் பொருள். நரம்புக் கிளர்ச்சி என்று கூறாது அதனைக் குறிப்பு என்றும் உணர்வு என்றும் உள்ளச்செயல் என்றும் உருப்போடுவதால் மாங்காய் விழுமோ"—என்று கூறுகின்றனர் நடத்தைக் கோள்கையினர்.

ஜேம்ஸ் என்ற பெரியார் இக் குறிப்பு என்பதனை வேறு வழியில் விளக்குகின்றார். நனவுநிலையில் சில பொருள்களே நமது மனத்தில் தெளிவாக விளங்குகின்றன. இவை தொடர்ந்து தோன்றுதலின், "நனவு ஆறு" எனப் பெயரிடுகின்றார். பிற எண்ணங்கள் நினைவுக்கு வந்தனவும் வாராதனவுமாக, இந் நனவாற்றங்கரை யோரமாகக் கலங்கிக் குழம்பித் தெரிந்தனவும் தெரியாதனவுமாகக் கிடக்கின்றன. நாய் குரைத்தலைக்கேட்ட எனது நனவாற்றிலே ஒலிப்புலனே தெளிவாக விளங்குகின்றது. நாயின் வடிவம் முதலியனவோ, ஆற்றின் கரையோரத்திலே தண்ணீரில் நனைந்தும் நனையாதும் நிற்கின்ற நாணற் புல்களைப் போல விளங்கியும் விளங்காதும் கிடக்கின்றன. இவ்வாறு தெளிவின்றிக் குழம்பித் தொலைவில் நிற்கும் கரையோர எண்ணங்களே, குறிப்பு எனப் பெயர் பெறுகின்றன என்று முடிவு கட்டுகின்றனர். "உனது தாய் மலடி" என்று மன்றாடிய பெரியாரின் பேச்சுப் போல இவ்வாராய்ச்சியின் முடிவும், நமக்கு வியப்பையே தருகின்றது. "இந்தச் சொல்லின் பொருள் யாது" என்ற ஆராய்ச்சியில் "எது விளக்கமின்றிக் குழம்பிக் கலங்கிக் கிடக்கின்றதோ அதுவே அதன் பொருள்" என்று முடிவுசெய்தால் அம்முடிவினை உளறல் என்றல்லவா உலகினர் கூறுவார். மிகமிக விளக்கமாக இருப்பது இக்குறிப்பே யாகும். ஆற்றிலே குளிக்கப் போகும் அம்மையார் ஒருவர் "மஞ்சள் எங்கே" என்று தேடுகிறார்கள். உலர்ந்த மஞ்சட் கிழங்கே அவ்வம்மையார் மனதிலே மிக விளக்கமாகத் தோன்றுகிறது. மஞ்சள் நிறமும் மஞ்சட் கிழங்கின் மணமும் அவ்வம்மையாரின் மனதிலே தோன்றி, அக்கிழங்கின் எண்ணத்தைச் சுற்றி நின்று, அதற்கு நிறம் பூசி மணமூட்டலாம். ஆனால், அவை அங்கு அவ்வளவு தெளிவாக விளங்குவதில்லை. மிக விளக்கமாக நிற்பது அவ்வம்மையாரின் குறிப்பாகிய மஞ்சட் கிழங்கே யாகும். அவ்வம்மையாரே, புடவைக் கடைக்குப்போய் "மஞ்சள் எங்கே" என்று தேடுவார்களானால், மஞ்சள்நிறப் புடவையை வாங்கவிரும்பும் அவ்வம்மையார் மனத்திலே மஞ்சள் நிறமே மிக விளக்கமாகத் தோன்றுகிறது. அங்கேயும், மஞ்சட் கிழங்கின் வாடை சிறிது வீசலாம். ஆனாலும் நிறமே விளக்கமாகத் திகழ்கின்றது.

நூலாலயத்தில் (Library) நூல்களை முறையாக அடுக்கி வைத்திருப்பதுபோல, நமது மனதிலேயும் பல எண்ணங்கள் நிரலே முறையாக விளங்குகின்றனவாம். ஏதேனும் ஒரு பொருளைக் கண்டபோது அதோடு இணைந்தனவும் ஒப்பானவும் இனமானவுமான எண்ணங்கள் எல்லாம் தமது தமது அறையிலிருந்தும் சடுதியில் வெளிவந்து கண்டபொருளை மார்புறத் தழுவியணைத்துக் குலாவி வரவேற்கின்றனவாம். பழைய எண்ணங்களை இவ்வாறு புதுப்பொருளோடு ஒக்கவைத்து உணர்தலை ஹெர்பர்ட் என்ற பெரியாரும் அவரைப் பின்பற்றியவர்களும் ஒத்துணர்வு (apperception) என்று விளக்கிவைக்கின்றனர். பழைய எண்ணங்களே இவர்களது கொள்கைப்படி ஒருபொருளின் குறிப்பாகும். "அப்புலனும் இப்புலனும் இவ்வுணர்வாகும்" என்று கூறும் புலக்கொள்கையினரது கூட்டற் கணக்கைவிடப் பழைய எண்ணமும் புதியபுலனும், பாட்டிலே இயையும் பண்ணொலிகள்போல, இசைந்து நிற்பதே உணர்வு என ஹெர்பர்ட்டைச் சேர்ந்தார் பாடும் இசைப்பாட்டுமிக அழகியதேயாகும். ஆனால் எண்ணங்கள் தனித்தனியே ஒவ்வோரிடத்தே குந்திக் கிடக்கின்றன என்று கூறுகின்ற இவ்வழக்கு, கல்லையும் காட்டையும் கடவுளராக்கிக் கூறும் பழைய வரலாறுகளோடு ஒருங்கு வைத்து எண்ணத்தகுந்ததே யாகும். எண்ணுவோனையும் எண்ணுகின்ற செயல்நிலையையும் விட்டுவிட்டு எண்ணம் என்று வழங்கிவருவதில் பயன் இல்லை, பொருளும் இல்லை. "எண்ணுவோன் ஒருவன் இருக்கிறான், அவனுடைய மனம் இயங்கி நிற்பதனையே எண்ணுதல் என வழங்குகின்றோம்" என்பதை மனதில் வைத்துக்கொண்டு "அவன் எண்ணுகின்றான்" என்பதாகப் பேசத்தொடங்குவோமானால், பொய்க் கடவுள் உலகிலேபுகாது பிழைத்துப் போவோம்.

18157

இவ்வாறு "குறிப்பு" என்பதனைப் பற்றிப் பல வகையான கொள்கைகள் வழங்கிவருகின்றன. அதனை அறிந்தன்றி மேலே செல்லுதற்கில்லை. அதனை அறிந்துகொள்வோமானால் எண்ணம் உணர்வு முதலியவற்றின் வேற்றுமையை எளிதில் அறியலாம்.

எண்ணம் = கருத்துப்புலன் + குறிப்பு

உணர்வு = காட்சிப்புலன் + கருத்துப்புலன் + குறிப்பு.

இவ்வாறு ஒரு விளக்கம் எழுதக்கூடும். நான் மஞ்சளைப்பற்றி மேலே எழுதினேன். என்னுடைய கண்ணெதிரே மஞ்சள் நிறமோ, கிழங்கோ, இல்லை. ஆனால், அவை கருத்துப்புலனாக உள்ளே எழுகின்றன; குறிப்போடும் விளங்குகின்றன. அந்த நிலையில் தான் எனக்கு, மஞ்சள் என்ற எண்ணம் உண்டாயிற்று. குரைக்கின்ற ஒலிப்புலன் காது வழியாகக் காட்சிப் புலனாகிறது; அந்நாயின் வடிவம் முதலியன கருத்துப்புலனாக ஒரு குறிப்போடு எழுகின்றன. இந்த நிலையில்தான், நாயின் உணர்வு உண்டாகிறது. எனவே, எண்ணம், உணர்வு முதலியவற்றை அறிய வேண்டுமானால் 'குறிப்பு' என்பதன் உண்மைத் தன்மையை நாம் நன்கு அறியவேண்டும், என்பதாயிற்று. ஆனால் அதனைப்பற்றியோ பல கொள்கைகள் பரவி

நிற்பதற்கு நாம் என் செய்வது? இவ்வாறு பலகொள்கைகள் எழுவது எதனாலே? பசும்பாலைப் பற்றிப் பலரும் பலவகையாக எண்ணுவதில்லையே? குறிப் பென்பதைப் பற்றிமட்டும் இவ்வாறு எண்ணுவானேன்? பசும்பாலை நேரே கொண்டுவந்து கண்டறிவதுபோல இக்குறிப்பைக் காண்பது அருமையினும் அருமை. நாய் என்ற உணர்வு எழுகின்றது. அவ்வுணர்வில் குறிப்பு என்பது உயிர்நிலையாக விளங்குகின்றது. பின்னே, இவ்வுணர்வு எவ்வாறு எழுகின்றது என்று ஆராயும்போது, அப்பொருளை எண்ணுவதை விட்டு, அப்பொருளை எண்ணுவதைப்பற்றி எண்ணுகின்றோம். அவ்வாறு எண்ணத்தைப்பற்றி எண்ணுகின்ற நிலையில் நாயை யுணர்ந்தபோது எழுந்த குறிப்பு இல்லையல்லவா? கருத்துப்புலனும் காட்சிப் புலனுமே தோன்றுகின்றன. குறிப்பென்பது காற்றாய்ப் பறந்துபோய்விடுகிறது.

கலித்தொகை

[602-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 22

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தலைவி தானும் உடன்செல்ல விரும்பினாள். அதற்கு அவன் உடன்படாது பிரிய, அவனை நோக்கி அவள், "நீர் பிரியின் என் உயிர் நீங்கும்" எனக் கூறியதைக் கூறுவது இச் செய்யுள்.

இலங்கொளி மருப்பிற் கைம்மா வுளம்புநர்
புலங்கடி கவணையிற் பூஞ்சினை யுதிர்க்கும்
விலங்குமலை வெம்பிய போக்கரு வெஞ்சுரந்
தனியே யிறப்ப யானொழிந் திருத்த
னகுதக் கன்றிவ் வழுங்க லூர்க்கே
இனியான்
உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்
தோணல முண்டு துறக்கப் பட்டோர்
வேணீ ருண்ட குடையோ ரன்னர்
நல்குநர் புரிந்து நலனுணப் பட்டோ
ரல்குநர் போகிய வூரோ ரன்னர்
கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்
சூடின ரிட்ட பூவோ ரன்னர்
எனவாங்கு
யானு நின்னகத் தனையே னனைது
கொலைவெங் கொள்கையொடு நாயகப் படுப்ப
வலைவர்க் கமர்ந்த மடமான் போல
நின்னுங்கு வருஉமென் னெஞ்சினை
யென்னுங்கு வாரா தோம்பினை கொண்மே

(தரவு)

(வரி. 1 - 7) இலங்கு ஒளி மருப்பின் - விளங்குகின்ற ஒளியினையுடையகொம்புகளைக்கொண்ட, கைம்மா உளம்புநர் - யானைகளை வருத்துபவர் (ஆகிய குறவர்), புலம் - (தினைப்) புலத்தினின்றும், கடி - (யானைகளை) ஓட்டும், கவணையில் - கவண் கல்லாலே, பூஞ்சினை உதிர்க்கும் - அழகிய (மரக்) கிளைகளிலுள்ள (பூக்களை) உதிர்க்கின்ற, விலங்குமலை-(ஒன்றற்கு ஒன்று) குறுக்கிட்டுக்கிடக்கின்ற மலைகள், வெம்பிய - (சூரிய வெப்பத்தால்) கொதித்தலைப்பெற்ற, போக்கரு வெஞ்சுரம் - போதற்கரிய வெய்ய காட்டில், தனியே இறப்ப - தனியே நீ போக, யான் ஒழிந்து இருத்தல் - யான் நின்னைவிட்டுப் பிரிந்து தனித்திருத்தல், இ அழுங்கல் ஊர்க்கு - இந்த ஒலி (நிறைந்த) ஊரிலுள்ள பெண்களுக்கு, நகுதக்கன்று - சிரித்தற்குத் தக்க காரியமாகும்; இனி யான் - (ஆகையால்) நீ இல்லனம் பிரியுமளவில் யான், உண்ணலும் உண்ணேன் - உண்ணுதலும் செய்யேன், வாழலும் வாழேன் - (உயிர்) வாழ்தலும் செய்யேன்.

* நகுதக்கன்று - இதில் அன் சாரியை.

கவண் - கல்லெறிதற்குக் கருவியாகக் கயிற்றால் செய்யப்பட்ட கருவி. ஊர் - இடவாகு பெயர்.

(தாழிசை)

(வரி. 8 - 9) தோள் நலம் உண்டு - (தம்) மார்பின் இன்பம் (தம் தலைவரால்) உண்ணப்பட்டு, துறக்கப்பட்டோர் - (பின் அவரால்) விடப்பட்ட மகளிர், வேள் நீர் - விரும்பிய நீர், உண்ட - குடிக்கப்பட்ட, குடை ஓரன்னர் - ஓலை எனத்தை ஒரு தன்மையாக ஒப்பர்.

நீர்வேட்கை யுற்றவர் பனையோலையைக் குடைவாகச் செய்துகொண்டு நீருண்டு, பின்னர் அதனை உடனே எறிந்துவிடுவர். அது மிதியுண்டு சிலநாளில் அழிவுறும்; அதுபோலத் தம் இன்பத்தைப் பெற்ற கணவரால் துறக்கப்பட்ட மகளிரும் சிறுமையுற்றுச் சின்னாளில் இறந்தொழிவர் என்பது கருத்து.

(வரி. 10-11) புரிந்து நல்குநர் - விரும்பியருளின கணவரால், நலன் - (தம்) அழகு, உணப்பட்டோர் - உண்ணப்பட்டுத் துறக்கப்பட்டோர், அல்குநர் - குடி இருப்பவர், போகிய ஊர் ஓர் அன்னர் - குடியிருப்பைவிட்டு நீங்கிய பாழூரை ஒரு தன்மையாக ஒப்பர்.

குடிகளால் துறக்கப்பட்ட ஊர் பொலிவழிந்து பாழாவதுபோலக் கணவரால் துறக்கப்பட்டார் அழகொழிந்து இறப்பர் என்பது கருத்து.

(வரி. 12-18) புரிந்து கூடினர் - விரும்பிக்கூடிய கணவரால், குணன் - (தம் நல்) இயல்பு, உணப்பட்டோர் - உண்ணப்பட்டுத் துறக்கப்பட்ட மகளிர், சூடினர் இட்ட பூ ஓர் அன்னர் - சூடிக்கொண்டவர் பின்னர் எறிந்த பூவினை ஒரு தன்மையாக ஒப்பர்.

அணிந்தவர் எறிந்த பூ வாடி அழிந்துவிடுவதுபோலக் கணவரால் துறக்கப்பட்ட மகளிரும் வாடி அழிவர் என்பது கருத்து.

(தனிச்சொல்)

எனவாங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி. 15-19) யானும் நின்னகத்து அனையேன்-யானும் நின்னிடத்து (அம்மூன்றின்) தன்மையையும் பெற்றுளேன், கொலை வெங்கொள்கையொடு - கொலை செய்யும் கொடிய தன்மையோடு, நாய் அகப்படுப்ப - நாய் (ஓடிக்) கௌவ, வலைவர்க்கு அமர்ந்த மடமான்போல - (அந்நாய்க்குப் பிடிகொடாமல்) வேடர்தம் கையில் சிக்கிய இளமைப்புடைய மானைப்போல, நின்னுங்கு வருஉம் என் நெஞ்சினை - (யான் என் மனம் எனக்கு உரியதென்று நினைத்துத் தடுக்கவும்) நினக்குரியதாக நின்னிடத்துவரும் எனது மனத்தை, என்னுங்கு வாராது ஓம்பினை கொள் - என்னிடத்து மீண்டும் வாராமல் பாதுகாத்து நின்னிடத்தே நிறுத்திக்கொள்.

தலைவற்கு வலைவரும் தலைவிக்கு நாயும் மானுக்கு நெஞ்சமும் உவமை.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[611-வது பக்கத் தொடர்ச்சி]

மு

1946 முகமா னனமுந் திசையு மிடமும்.
1947 முசலி யுடும்புந் தாழையு மோந்தியும்
முகுந்தற்கு மூத்தோன் பெயரு மாகும்.
1948 முச்சி மயிர்முடியு முச்சியு மாகும்.
1949 முடங்கன் மடங்கலுங் கைதையு மூங்கிலும்
ஓலையு மரங்கு நோயு மாகும்.
1950 முடுவல் பெண்ணாயுஞ் செந்நாயு மாகும்.
1951 முடிமயிர் முடியுங் கிரீடமு மாகும்.
1952 முடலை யுண்டையும் பீடுந் திரள்வடிவு
முருடுங் கழலையுங் குறடு மூற்றமும்
முடைநாற் றமுமென மொழிய லாகும்.
1953 முண்டகந் தாழையும் யானை மத்தமும்
கள்ளுநீர் முள்ளியுந் தாமரையு நெற்றியும்
கடலும்முள் மூலமுங் கருத லாகும்.
1954 முத்த முதமும் பிரியமு முத்தும்
மருதமு மெனவே வழங்கினர் புலவர்.
1955 முதலை செங்கிடையு முருந்து மாகும்.
1956 முருந்து வெண்குருகு மூர்தலு மாகும்.
1957 முருகு கள்ளு மிளமையு நாற்றமும்
விழாவு முருகனு மெலுமிச்சும் வனப்பும்
அகிலு மெழுச்சியும் வெறியாட் டாளனும்.
1958 முரணே வலியும் பகையு மாகும்.
1959 முருந்து வெண்குருத்து மிறகின் மூலமும்.
1960 முரம்பு பரலடுத்த நிலமும் பாறையும்
மேடு மெனவே விளம்பினர் புலவர்.
1961 முரசு பறையு முத்திரட் டாதியும்.
1962 முருகன் சேயும் வெறியாட் டாளனும்.
1963 முரசந் தூரியமும் பணையு மாகும்.
1964 முருடு முருடு மியமு மாகும்.
1965 முல்லை முல்லையுங் கொற்றமு மிசையுங்
கான மல்லிகையு முல்லை நிலமும்
[கற்பு மெனவே கழறினர் புலவர்].
1966 முழவு குளிருங் குடமுழாவு மியமும்.
1967 முளரி தீயுங் காடும் விறகும்
முள்மரமும் சிறுமையுந் தாமரையு மாகும்.
1968 முளையங் குரமு மூங்கிலும் பிள்ளையும்.
1969 முறைதிரு முறையு முறைமையுங் குணமும்
ஊழும் கோசமும் கூப்பிடு முறையும்.
1970 முற்று வளைத்தலு முற்றுதலு மாகும்.
1971 முறுவல் நகையும் பல்லு மாகும்.
1972 முற்குளம் பூராட நாளுமுறை குளமும்.
1973 முற்றல் சூழ்போதலு மூப்பு முடிவும்
வெறுத்தலு மெனவே விளம்புத லாகும்.
1974 முறமே சுளகும் விசாகமு மாகும்.
1975 முறியே தளிரு முறிதலு மிலையும்.
1976 முன்னல் நினைவு நெஞ்சு முரைப்பர்.
1977 முன்பு வலியு முன்பு மாகும்.
1978 முனிதவ முனிவரும் கும்ப முனியும்
யானைக் கன்றும் [1]அகத்தியும் தனுவும்.
1979 முனையே பகையும் வெறுப்புங் கூர்மையும்
முதன்மையும் வீரமும் மொழிய லாகும்.
1980 முன்னஞ் சீக்கர[மு] முந்தின காலமும்
எண்ணமுஞ் சிங்கமு மியம்ப லாகும்.

மூ

1981 மூசல் சாவு மொய்த்தலு மாகும்.
1982 மூதிரை யீசனுந் திருவா திரையும்.
1983 மூரி யேறு மெருமையுஞ் சோம்பும்
முரனும் பீடு நெரிவுந் தொன்மையும்.
1984 *மூர்த்தி தலைவனும் உருவமும் ஆகும்.
1985 மூரல் சோறும் பல்லுஞ் சொல்லும்
நகையு மெனவே நவின்றனர் புலவர்.
1986 மூலம் வேரு மேதுவு முதலும்
மூல நோயும் மூல நாளும்
மாயனுங் கிழங்கும் வழங்கினர் புலவர்.
1987 மூழி சோறு வாவியு மகப்பையும்.
1988 மூவழ சோறு மகப்பையு மாகும்.

மெ

1989 மெத்தை மெத்தையுஞ் சட்டையு மாகும்.
1990 மெய்மெய்ப் பொருளு முடலு முண்மையும்
ஒற்றெழுத்து ஞானமு முரைக்க லாகும்.

மே

1991 மேக்கு மேற்றிசையு மேலு மாகும்.
1992 மேகலை தூசு மணிமே கலையும்.
1993 மேடந் தகருங் கவசமு மேடமும்.
1994 மேதை தோலும் புதனு மிறைச்சியும்
அறிஞனும் அறிவும் மேம்பாடு நரம்பும்
கள்ளு மெனவுங் கழறினர் புலவர்.
1995 மேல் பச்சிமமு மேலோரு மியல்பும்
விண்ணு மேற்கும் விளம்ப லாகும்.
1996 மேழை காடியுங் [2]கஞ்சியு மாகும்.
1997 மேழகங் கவசமுந் தகரு மாகும்.
1998 மேனி யுடம்பு நிறமு மாகும்.

(பிரதி) 1. விறகுர். 2. கஞ்சியு.

* இச்சூத்திரம் ஒரு பிரதியிற் காணப்படவில்லை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0

குழந்தைகளுக்கு

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள்:

சந்தனாதி	6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக	,,	0-12-0
பிருங்காமலக	,,	0-12-0

ஸ்திரீகளுக்கு

ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

(ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. மெடிகேடட் டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசோந்தசிற்றுமணக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்

ஜவரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

மை

1999 மைந்து மயக்கமும் வலியு மாகும்.
2000 மைந்தன் மைந்தனும் திறலோனு மாகும்.
2001 மைகொண் மூவுங் கண்ணிடு மையும்
இளமையு மலடுங் தகருங் கருமையும்
குற்றமு மெனவே கூற லாகும்.

மொ

2002 மொக்குள் பூமொட்டுங் குமிழியு மாகும்.
2003 மொய்செருக் களமும் தாயும் யானையும்
[3] மூசலுங் திரளும் வண்டு மாகும்.
2004 மொய்த்தல் மூடுதலு [4] நெருங்கலு மாகும்.
2005 மொய்ம்பு வலியுந் தோளு மொழிவர்.

மோ

2006 மோடு வயிறும் மோடும் போழ்தலும்
பெருமையு மெனவே பேச லாகும்.

ய

2007 யவனர் சோனகரும் சித்திர காரரும்
[5] கம்மா ளருமெனக் கழறினர் புலவர்.

யா

2008 யாணர் தேனும் புதுமையும் தச்சரும்
யாழ்நரு நன்மையுஞ் சித்திரக் காரரும்.
2009 யாப்புக் கவிதையுங் கட்டுதலு மாகும்.
2010 யாமம் தெற்கு மிரவுஞ் சாமமும்
பொழுது மெனவே புகல லாகும்.
2011 யாழே வீணையும் மிதுன ராசியும்
ஆந்தையு மசுபதி நட்சத் திரமும்.
2012 யான மறைவீடும் ஊர்தியுந் தோணியும்.

யூ

2013 யூக முட்பொரு ளுணர்தலுந் தருக்கமும்
உடற்குறை யுங்கருங் குரங்குமோர் புல்லும்
யூகமுங் கோட்டா னுமுரைத் தனரே.
2014 யூபம் படைவகுப்பும் வேள்வித் தம்பமும்
உடற்குறை யுமென உரைத்தனர் புலவர்.

யோ

2015 யோகங் கூட்டமுந் தியானமு முபாயமும்
முயற்சியும் யோகமு மொழிந்தனர் புலவர்.

(பிரதி.) 3. புகலுங். 4. ங் கொடுத்தலு மிருத்தலும். 5. கண்வாழருமெனக்

வர்த்தமானம்

துருக்கிப் போலீஸ் சட்டம்:—கமால் பாஷாவின் தலைமையின்கீழதான துருக்கிக் குடியரசு சபையினர், கலியாண மானவர்களைத்துருக்கிப்போலீஸில் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்று ஒரு சட்டம் செய்திருக்கின்றனராம். கலியாண மாகாதவர்களிடம் நேர்மையும் ஓரம்சாராச்செய்கையும் இருக்குமென்றும், அதனால் இப்பொழுது போலீஸ் படையில் காணப்படும் குறைகள் அகன்றுவிடும் என்றும் அந்நாட்டு அரசாங்கத்தார் கருதுகின்றனராம்.

நாய்க்கு மாடி வீடு:—அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் ஒரு தனவந்தர் இருக்கின்றனராம். அவர் ஒரு சிறந்த நாயை அருமையுடன் வளர்க்கின்றாராம். அதற்கென அவர் ஒரு மாடி வீட்டைக் கட்டியிருக்கின்றாராம். அவரது ஜீவகாருண்யச்செயலை அமெரிக்கப் பத்திரிகைகள் மிகவும் கொண்டாடுகின்றனவாம்.

* * * *

புதிய யந்திரம்:—ஐரோப்பாவில் லாஸ் ஆஞ்சல்ஸ் என்னுமிடத்தில் வசிக்கும் E. M. கிம்பால் என்னும் ஒரு ஆராய்ச்சியாளர் ஒரு புதிய யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கின்றாராம். அந்த யந்திரத்தின் உதவியினால் பூமியில் எந்த விடத்தில் தங்கம் இருக்கின்றது என்று சுலபமாகக் கண்டுபிடித்து விடலாமாம்.

* * * *

ஆகாய விமானச் சிறுமி :—ஐரோப்பாவில் லொரையின் எஞ்சல்ஸ் என்னும் ஓர் பெண் இருக்கின்றாள். அவளுக்கு வயது பன்னிரண்டு. அவள் ஆகாயவிமானத்தை மிகத் திறமையாக ஓட்டுகின்றாளாம். ஆகாய விமானிகள் பலர் வியக்கும்வண்ணம் அவள் பலமுறை தனியே அதிகதூரம் பறந்துளாளாம்.

18915

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ...	... Rs. 1,55,66,720
Out of a business of	... Rs. 1,96,70,000 received in proposals.
Life Assurance is security	for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.
Claims paid over	... Rs. 1,00,00,000
Total Assets exceed	... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

அமிர்தசாகரம்
தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய
ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு	ரூ. 1 0 0
5 டப்பிகள்	ரூ. 4 0 0

ஓஹம்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி ஓஹம்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)